ISSN: 2012 - 6352

# தொண்டன்

நூலகம்

ஆரம்பம் 1969 பெப்ரவரி | சமய - சமூக - இலக்கிய வெளியீடு | செப்டெம்பர் - 2012 | 30/=

## மட்டக்களப்பில் நடைபெற்ற உலகத் தொடர்புதின விழா நிகழ்வுகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

**செப்டெம்பர் - 2012**

மலர் - 44 இதழ் - 08

**ஆசிரியர்**
லெஸ்லி ஜெயகாந்தன்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
சந்திரசேகரன் சசீதரன்
பைந்தமிழ்க்குமரன் டேவிட்

**ஆலோசகர்கள்**
A.G. இராஜேந்திரம்
A.S. யோகராஜா

**கணினி வடிவமைப்பு**
சுபாஜெனி சங்கர்

**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**
வணசிங்கா அச்சகம்
மட்டக்களப்பு.


## உள்ளே ...




அன்புடன் உங்களோடு ......... 01
இலங்கைக் கத்தோலிக்க ....... 02
கிழக்கில் இரண்டு மறை ......... 05
46வது உலகத் தொடர் ........ 06
காலடித் தடங்கள் .............. 08
மட்டக்களப்பு மறைமாவட்ட ..... 11
அன்புமணி அண்ணனுக்கு ....... 13
ஓர் அதிபரின் டயரியிலிருந்து ..... 14
முதல் ஆயரின் வாழ்க்கைத் .... 16
கத்தோலிக்கக் குரு ............. 20
தொண்டனின் சில ............... 21
சுமையா...? சுகமா...? ......... 23
தமிழில் கிறிஸ்தவ ................. 25
புதிய மறைமாவட்டமும் .......... 27
பாஸ்கு நாடகங்களும் .......... 29
விவிலியங் கற்போம் .............. 31
அறிவை வளர்ப்போம் ............ 32


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


**SOCIAL COMMUNICATIONS CENTRE**
**P. O. BOX - 44**
**BATTICALOA.**
**TEL: 065 - 2226486**
**E.mail: scctribatti@gmail.com**


விலை : 30/=
ஆண்டு சந்தா : 500/=
(தபாற்செலவு உட்பட)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம்

# அன்புடன் உங்களோடு...!

இம்மாதம் மட்டக்களப்பு மறைமாவட்ட மக்களுக்கு மகிழ்ச்சியின் மாதம். காரணம் இம்மாதம் 23ம் திகதி மட்டக்களப்பு தனிமறைமாவட்டமாக எழுச்சிபெற்று இலங்கைத் திருச்சபையின் வரலாற்றில் புதிய மறைமாவட்டமாக பிரகடனப்படுத்தப்படவிருக்கிறது.

ஒருதாய் ஒரு பிள்ளையைப் பெற்றெடுக்கவேண்டுமானால் பிள்ளைக்கும் தாய்க்கும் இடையே இருக்கும் தொப்புள் கொடி உறவு துண்டிக்கப்படவேண்டும். அப்போது தான் அக்குழந்தை வளர்ச்சி பெறும், எழுச்சி பெறும், முதிர்ச்சியடையும்.

அதேபோல இவ்வளவு காலமும் கிட்டத்தட்ட 119 ஆண்டுகள் திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டமாக இருந்த எமது மறைமாவட்டம் தற்பொழுது தனி மறைமாவட்டமாக தாய் மறைமாவட்டமாகிய திருகோணமலை மறைமாவட்டத்திலிருந்து புதிய மறைமாவட்டமாக உருவாக்கப்பட்டுள்ளது.

எனவே, இப்புதிய மறை மாவட்டம் வளர்ச்சிப் பாதையிலே எழுச்சி பெற நாம் ஒவ்வொருவரும் பாடுபட முன்வரவேண்டும். இம் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக அதி வந்தனைக்குரிய ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.


இவ்வளவு காலமும் எமது மறைமாவட்ட ஆயராக இருந்த மேதகு ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் கிட்டத்தட்ட 29 ஆண்டுகாலமாகப் பணியாற்றி விசுவாசப் பாதையிலே எம் அனைவரையும் வளர்த்துள்ளார். அவரது பணிவாழ்விற்கும் சேவைக்கும் நிகரே இல்லை. இவ்வளவு காலமும் எம்மை விசுவாசப்பாதையிலே வழிநடத்திய எமது ஆயருக்கும் ஏனைய சகல குருக்களுக்கும், துறவிகளுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இப்புதிய மறைமாவட்டம் வளர்ச்சி பெற நாம் அயராது உழைப்போம்.

மேலும், நடைபெறும் கிழக்கு மாகாணத் தேர்தலை நாம் நல்ல முறையில் பயன்படுத்தி வேதாளங்களை மீண்டும் முருங்கை மரத்தில் ஏறவிடாது, நல்ல சேவை மனம் கொண்டவர்களைத் தேர்ந்தெடுப்போம்; நாட்டுக்காய் உழைப்பவர்களை வெற்றி பெறச் செய்வோம்.

**மனிதன் தனக்குள் இருக்கும் இறைத்தன்மையை உணர்வதற்கு வாய்ப்பளிக்க அவன் உள்நோக்கி அடியெடுத்து வைப்பதற்காகவே மதங்கள் உருவாக்கப்பட்டன. தெருவில் கூவி விற்பதற்காக அல்ல. எண்ணிக்கையைச் சுட்டிக்காட்ட வேண்டும் என்பதற்காக எதையும் செய்யத்துணியும் மூர்க்கத்தனத்துக்குப் பெயர் மதம் அல்ல.**

**- ஜக்கி வாசு தேவ் -**

**●- ஆசிரியர் -**



## இறைவாக்கு

"நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர்,
அரசகுருக்களின் கூட்டத்தினர், தூயமக்களினத்தினர்,
அவரது உரிமைச் சொத்தான மக்கள்"

● (1 பேதுரு 2: 9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபையின் புதிய மறை மாவட்டமாக மட்டக்களப்பு மறைமாவட்டம்

றாபி வலன்ரீனா பிரான்சிஸ்

**அறிமுகம் :**

போர்த்துக்கேயரின் இலங்கை வருகையுடன் இலங்கையில் கத்தோலிக்க மதம் பரவத் தொடங்கியது. 16ம் நூற்றாண்டு தொடக்கம் பல்வேறு இன்னல்களையும் இடையூறுகளையும் கடந்து இம்மதம் ஆழ வேரூன்றிப் பரந்துள்ளது. கத்தோலிக்க மதகுருக்கள் மற்றும் துறவறசபையினரின் அர்ப்பணிப்புடனான சேவை இதற்குக் காரணமாகும். குறிப்பாக 19ம் நூற்றாண்டில் இயேசு சபையினர் இலங்கையில் பணியாற்ற வந்ததன் பின்பு கத்தோலிக்க மதம் இலங்கையில் புத்தெழுச்சி பெற்றதென்றே சொல்ல வேண்டும்.

ஆரம்ப காலத்தில் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை ஒரே மறைமாவட்டமாக கொச்சின் மறைமாவட்ட நிர்வாகத்தின் கீழ் பரிபாலிக்கப்பட்டு வந்தது. அதன் பின்னர் 1845ல் கொழும்பு, யாழ்ப்பாணம் என இரு மறைமாவட்டங்கள் உருவாக்கப்பட்டன. கிழக்கிலங்கைக் கத்தோலிக்க திருச்சபை யாழ்ப்பாண மறைமாவட்ட நிர்வாகத்தின் கீழேயே நிர்வகிக்கப்பட்டு வந்தது. அதன் பின்னர் கத்தோலிக்கரின் பரம்பல் காரணமாகவும் அவர்களது ஆன்மீகத் தேவையின் அதிகரிப்புக் காரணமாகவும் புதிய மறைமாவட்டங்கள் உருவாக்கப்பட்டன.

இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையில் கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, குருநாகல், காலி, திருகோணமலை – மட்டக்களப்பு, பதுளை, மன்னார், அநுராதபுரம், இரத்தினபுரி, சிலாபம் ஆகிய 11 மறைமாவட்டங்கள் இதுவரை இயங்கி வந்தன. கடந்த 03.07.2012ம் திகதி மட்டக்களப்பு மறைமாவட்டம் புதிய மறை மாவட்டமாக பரிசுத்த திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டது. இதன்படி திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்திலிருந்து மட்டக்களப்பு பிரிக்கப்பட்டு, மட்டக்களப்பு தனி மறைமாவட்டமாக இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையில் இணைந்துள்ளது. இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை தற்போது 12 மறை மாவட்டங்களைக் கொண்டதாக விளங்குகின்றது.

**திருகோணமலை மறைமாவட்டம்:**

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியதான கிழக்கிலங்கையின் முதலாவது மறைமாவட்டமாக திருகோணமலை மறைமாவட்டம் 1893ல் திருத்தந்தை 13ம் சிங்கராயர் அவர்களால் உருவாக்கப்பட்டது. திருகோணமலை புனித மரியாள் ஆலயம் பேராலயமாகும் தகுதியைப் பெற்றது. மடகாஸ்காரில் இணை ஆயராகப் பணியாற்றிக்கொண்டிருந்த சார்ள்ஸ் லவிஞ்ஞே யே.ச (Charles Lavinge S.J) திருகோணமலை மறைமாவட்டத்தின் முதலாவது ஆயராக 1896ல் நியமனம் பெற்றார். எனினும், அவர் 1898ல் திருகோணமலையில் பதவியினைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பேற்று 1913வரை (அவர் இறக்கும் வரை) இங்கு ஆயராகப் பணியாற்றினார். இவரது காலத்தில் 1906 மார்கழி மாதம் இம் மறைமாவட்டத்திலிருந்து முதல் குருவாக லாசரஸ் திருநிலைப்படுத் தப்பட்டார்.

1917 வைகாசி மாதம் கஸ்ரன் றொபிஷே அடிகள் (Gaston Robichez S.J) திருத்தந்தை 15ம் ஆசீர்வாதப்பர் அவர்களால் ஆயராக உயர்த்தப்பட்டு இதேவருடம் ஆடி மாதம் ஆயராகத் திருநிலைப்படுத் தப்பட்டார். இம்மறைமாவட்டத்தில் மட்டக்களப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்த இவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவு கத்தோலிக்கர்களைக் கொண்டிருந்தமை, கிழக்கு மாகாணத்தில் மைய நிலையமாகவும் தலைநகராகவும் மட்டக்களப்பு இருக்கின்றமை ஆகியவற்றை அடிப்படையாக வைத்து இம்மறைமாவட்டத்திற்கு மட்டக்களப்பு மறைமாவட்டம் எனப் பெயர் மாற்றம் செய்வதற்கு முயற்சிகள் எடுத்தார். எனினும், திருத்தந்தை 15ம் ஆசீர்வாதப்பரின் பிரதிநிதியின் ஆலோசனைக் கிணங்க இக்கோரிக்கை கைவிடப்பட்டது.

ஆயர் கஸ்ரன் றொபிஷே ஆண்டகையின் இறப்பின் பின்னர் (1946: அவரது உடல் மட்டக்களப்பு புனித மரியாள் ஆலயத்தில் அடக்கம் செய்யப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது) கண்டி பாப்பிறை குருமடத்தின் அதிபராக இருந்த அருட்திரு. இக்னேஷியஸ் கிளெனி அடிகள் யே.ச (Ignatius Philip TriguerosGlennie S.J) 1947ல் ஆயராகத் திரு நிலைப்படுத்தப்பட்டு திருகோணமலை மறை மாவட்டத்தின் ஆயராக நியமிக்கப்பட்டார்.

**திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டம்:**

ஆயர் இக்னேஷியஸ் கிளெனி ஆண்டகை இம்மறைமாவட்டத்தின் பெயரை மாற்றுவதற்கு விண்ணப்பித்ததுடன் வத்திக்கான் பொதுச் சங்கத்திற்கான தனது உரோமை விஜயத்தின் போதும் இது விடயமாக எடுத்துரைத்தார். இதன் பயனாக 1965ல் திருகோணமலை மறைமாவட்டம் திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டம் எனப் பெயர் மாற்றம் பெற்றதுடன் மட்டக்களப்பு புனித மரியாள் ஆலயம் இணைப் பேராலயமாகவும் அறிவிக்கப்பட்டது. 1967 தொடக்கம் 1972வரை துணை ஆயராக வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை கடமையாற்றினார். இவர் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயராக நியமனம் பெற்றுச் சென்றார்.

இதன் பின் எல்.ஆர். அன்ரனி ஆண்டகை ஆயர் (Leo Rajendram Antony) இக்னேஷியஸ் ஆண்டகை ஓய்வுபெற்ற 1974 தொடக்கம் 1983ம் ஆண்டு முற்பகுதிவரை திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயராகப் பொறுப் பேற்றார். இம் மறைமாவட்டத்தின் முதல் தமிழ்க் கத்தோலிக்க ஆயர் அவரே. இம்மறைமாவட்டத்தை இரு தனித் தனி மறைமாவட்டங்களாகப் பிரிப்பதற்கு வத்திக்கானுக்கு இவர் விண்ணப்பத்தினை அனுப்பினார் எனினும், சாதகமான பதிலேதும் கிடைக்கவில்லை.

இவருக்குப் பின்னர் 1983ல் ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை ஆயராகப் பொறுப்பேற்றார். 2012 பிற்கூறு வரை அவரது பணி தொடர்ந்தது. மறைமாவட்டத்தில் குருக்களின் தொகை அதிகரிக்கப்பட்டதுடன் புதிய பங்குத் திருச்சபைகளும் உருவாக்கப்பட்டன.

**கத்தோலிக்கப் பத்திரிகைகள்/சஞ்சிகைகள்:**

1926 தொடக்கம் இம்மறைமாவட்டத்தில் சஞ்சிகைகள் அவ்வப்போது வெளியிடப்பட்ட தாக அறியமுடிகின்றது. அருட்திரு அல்போன்ஸ் நிச்சட் அடிகளால் எட்டுப் பக்கங்களைக் கொண்ட **The Pilgrim** என்னும் மாதாந்த சஞ்சிகை ஒன்று வெளியிடப்பட்டது. தமிழிலும் ஆங்கிலத்திலும் செய்திகளும் கட்டுரைகளும் இதில் வெளிவந்தன.

**குழந்தைகளுக்கு விவிலியம்: 5 கோடியைத் தாண்டி.....**



அவரவர் தாய் மொழியில் வெளியிடப்பட்டுள்ள விவிலியம் பல இலட்சம் குழந்தைகளுக்குப் பெரும் பரிசாக அமைந்துள்ளதென்று 'எயிட் டு த சர்ச் இன் நீட்' என்ற கத்தோலிக்கப் பிறரன்பு அமைப்பு கூறியது. 1979ம் ஆண்டு ஆரம்பமான இந்த முயற்சியால், குழந்தைகளும் புரிந்து கொள்ளும் வகையில் 172 மொழிகளில் விவிலியங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதுவரை வெளியான விவிலியங்களின் எண்ணிக்கை 5கோடியை அண்மையில் தாண்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும், குறுகிய காலமே இது வெளிவந்தது. 1947ல் அருட்திரு தம்பிமுத்து அடிகள் **The Beagon** என்னும் பெயரில் மாதாந்த சஞ்சிகையினை ஆரம்பித்தார். இதுவும் சிலவருடங்கள் மட்டுமே வெளிவந்தது. 1969ல் **தொண்டன்** என்னும் பெயரில் மாதாந்தப் பத்திரிகை வெளிவந்தது. அது பின்னர் சஞ்சிகையாக உருமாற்றம் பெற்று இன்றுவரை வெளிவந்துகொண்டிருக்கின்றது. 1978ல் ஏற்பட்ட சூறாவளியின் பின்னர் புனர்வாழ்வு தொடர்பான செய்திகளையுள்ளடக்கியதாக **சூறாவளி** என்னும் பத்திரிகை வெளிவந்தது. குருக்கள் மற்றும் துறவறத் தார் மத்தியில் செய்திகளைப் பகிர்வதற்காக சஞ்சிகை ஒன்றின் தேவை உணரப்பட்டபோது 1981ல் **BAT NEWS** (மட்டக்களப்புச் செய்தி) என்னும் பெயரில் சஞ்சிகை வெளிவந்தது. செய்திகள், நகைச் சுவை, சிந்தனைக்குக் குறிப்புகள், பிறந்தநாள் வாழ்த்து முதலானவை இதன் உள்ளடக்கமாக அமைந்திருந்தன. 1984ல் **INTERNOS** (Inter Diocessan News) என்னும் மாதாந்த சஞ்சிகை வெளிவரத் தொடங்கியது. **வெட்டாப்பு** 1992 தொடக்கம் இன்றுவரை வெளிவரும் பத்திரிகையாகும்.

**மட்டக்களப்பு மறைமாவட்டம்:**

2005ல் இம்மறைமாவட்டத்தைப் பிரிப்பதற் கான முயற்சிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டன. ஆயர், துறவறசபையினர் மற்றும் கத்தோலிக்க அமைப்புகள் எனப் பலமுனைகளிலிருந்தும் இதற்கான அழுத்தங்கள் முன்வைக்கப்பட்டன.

இதன் காரணமாக 2012 ஜூலை மாதம் 03ம் திகதி வத்திக்கான் நேரப்படி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு (இலங்கை நேரம் பிற்பகல் 3.30 மணி) மட்டக்களப்பு மறைமாவட்டம் திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டத் திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு தனியான மறைமாவட்டமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. மட்டக்களப்பு புனித மரியாள் ஆலயம் பேராலயமா கும் தகுதியினையும் பெற்றது.

மட்டக்களப்பு மறைமாவட்டம் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இரு நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியதாக விளங்குகின்றது. சுமார் 7269 சதுர கிலோமீற்றர் (2807 சதுர மைல்) பரப்பளவைக் கொண்டதாக விளங்கும் இம்மறைமாவட்டம் சுமார் 55225 (2012) கத்தோலிக்கரைக் கொண்டுள்ளது.

கல்முனை மறைக்கோட்டம், மட்டக்களப்பு மறைக்கோட்டம் என இரு பெரும் பிரிவுகளை உள்ளடக்கியதாய் விளங்கும் இம்மறைமாவட்டம் 25 பங்குகளை (Parishes) உடையது. இவற்றில் வாகரை, வாழைச்சேனை, கல்குடா, செங்கலடி, ஆயித்தியமலை, புல்லுமலை, தன்னாமுனை, பனிச்சையடி, இருதயபுரம், சகாயபுரம், அமிர்தகழி, டச்பார், தாண்டவன்வெளி, புளியந்தீவு, வீச்சுக் கல்முனை, புளியடிக்குடா, நாவற்குடா, தாழங்குடா ஆகிய 17 பங்குகள் மட்டக்களப்பு மறைக்கோட்டத் திலும் தேற்றாத்தீவு, கல்லாறு, கல்முனை, சொறிக்கல்முனை, அக்கரைப்பற்று, திருக்கோவில், அளிகம்பை, அம்பாறை ஆகிய 8 பங்குகள் கல்முனை மறைக்கோட்டத்திலும் அமைகின்றன. எதிர்வரும் செப்டம்பர் மாதம் தொடக்கம் திருகோணமலை மறைமாவட்டம் தனியாகவும் மட்டக்களப்பு மறைமாவட்டம் தனியாகவும் நிர்வாக ரீதியாக இயங்கவுள்ளதுடன் திருகோணமலை மறைமாவட்டத்தின் ஆயராக ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களும் மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் ஆயராக ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்களும் பணிபுரிவர். மட்டக்களப்பு, தன்னாமுனையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆயர் பேரருட் கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்கள் மட்டக்களப்பு மறைமாவட்டத் தின் முதலாவது ஆயர் மட்டுமன்றி இம்மறை மாவட்டத்திலிருந்து ஆயரான முதலாவது ஆயரும் கூட. இத்தகைய வரலாற்றுப் பதிவுடன் கடமை யேற்றிருக்கும் ஆயர் அவர்களின் பணிகள் மூலம் மட்டக்களப்புக் கத்தோலிக்க திருச்சபையும் அதனூ டாக இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபையும் பெருமையுறும் காலம் கனிந்துள்ளது. இம்மறை மாவட்டத்தினூடான பணி வெறுமனே சமயப் பணியாக மட்டுமில்லாமல் இன, மத எல்லைகளைக் கடந்த பணியாகவே எப்போதும் இருந்து வந்திருக் கின்றது.

இம்மறைமாவட்டம் இணைந்திருந்த காலங்களில் எதிர்கொண்ட சவால்களும் பலம், மற்றும் பலவீனங்களும் தனி மறைமாவட்டமாகி யுள்ள தற்போதைய காலத்திலும் இனி எதிர்வருகின்ற காலங்களிலும் வரலாற்றுணர்வுடன் கருத்திற் கொள்ளப்பட்டு இம் மறைமாவட்டத்தின் மீள் உருவாக்கத்திலும் புத்தெழுச்சியிலும் ஒன்றிணை விலும் கவனம் செலுத்தப்படவேண்டியது அவசிய மாகும்.

**நன்றி:**

ஆரம்பகால வரலாற்றுத் தகவற் குறிப்புகள்:
அருட்தந்தை D. **சாமிநாதன் அடிகள்**

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் இரண்டு மறை மாவட்டங்கள்

## இவர்கள் இப்படிச் சொன்னார்கள்!

### திரு. ஜே. பத்திநாதன் — மட்டக்களப்பு



திருகோணமலை — மட்டக்களப்பு மறைமாவட்டம் பிரிக்கப்பட்டதனை வரவேற்கின்றேன். ஆயர் பிரயாணம் செய்யவேண்டிய தூரம் குறைந்துள்ளது. வழிநடத்தவேண்டிய மந்தைகளின் தொகை குறைந்துள்ளது. தரிசிக்க வேண்டிய பணித்தளங்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. இதனால் ஆயர் திருவிழா கொண்டாட்டத்திற்கு மாத்திரம் பணித்தளத்திற்கு விஜயம் செய்வதும் குறைக்கப்பட்டு, பணித்தளக் குருக்களின் நிருவாக – ஆன்மீக, வழிபாட்டுச் செயற்பாடுகளையும் பார்வையிட ஆலோசனை வழங்க, நெறிப்படுத்தி ஊக்கப்படுத்த ஆயரது பணித்தளங்களுக்கான வரவுகள் அதிகரித்தல் அவசியம். இதனால் பொதுநிலையினர்–குருக்கள்–ஆயர் கலந்துரையாடல்கள் அதிகரிக்கும். உறவுகள் வளரும். இடைவெளி ஏற்படாது. ஏற்பட்டாலும் ஆரம்பத்திலேயே நிவர்த்தியாகக்கூடும்.

### திரு. K.S. கொலின் — திருகோணமலை

திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டம் இரண்டாகப் பிரிந்ததில் எங்களுக்கு நன்மைகளுமுண்டு சில தீமைகளுமுண்டு என்று நினைக்கிறேன். இதுவரை காலமும் நாம் மட்டக்களப்போடு ஒட்டிக்கொண்டிருந்தோம். திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டமாக இருந்தாலும் எல்லாமே மட்டக்களப்பைத்தான் மையமாகக் கொண்டிருந்தன. தற்போது நாம் தனியானதன் மூலம் எமக்குத் தேவையானதை வசதியானதை எமக்கேற்றபடி விரைவாகச் செய்யவும் நாம் வளர்ச்சியடையவும் உதவும் என்று நம்புகிறேன். பலவற்றை நாம் புதிதாக ஆரம்பிக்க வேண்டியுள்ளது. இவைகளை உடனடியாகச் செய்ய முடியாவிட்டாலும், காலப்போக்கில் செய்யமுடியும். மேலும், சில பொருளாதாரப் பின்னடைவுகளும் ஏற்படலாம் என்று நினைக்கிறேன்.

### திருமதி. மனோகரி கந்தசாமி — மட்டக்களப்பு



இதுவரை காலமும் திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவமட்டம் ஒன்றாக இருந்து பல்வேறு வளர்ச்சிகளைக் கண்டுள்ளது. பல்வேறு பிரச்சினைகளிலும் துன்பங்களிலும் மக்கள் தவித்தபோது ஆயரின் தலைமையில் மக்களுக்குப் பெரும் உதவிகளைத் திருச்சபை செய்துள்ளது. இப்போது இரண்டாகப் பிரிந்துள்ள இரண்டு மறைமாவட்டங்களும் இரண்டு ஆயர்களின் தலைமையில் இன்னும் அதிகமாக அபிவிருத்தியடைய வாய்ப்புக் கிடைத்துள்ளது.

### எஸ்.எஸ்.பிலிப் (நெப்போலியன்) — திருகோணமலை

திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டம் இரண்டாகப் பிரிந்தது நல்லது என்றே நான் நினைக்கிறேன். அப்படித்தான் பலரும் நினைக்கின்றார்கள். நாம் எல்லாவற்றிலும் மட்டக்களப்பில் தங்கியிராது எமக்குத் தேவையானதை இங்கே அமைத்துக் கொள்வதும் வளர்த்தெடுப்பதும் அவசியம். ஆனால், இவைகளுக்கு நீண்ட காலமெடுக்குமென்று எண்ணுகிறேன்.

நான் அறிந்தவகையில் மட்டக்களப்பு பல விதங்களில் முன்னிற்கிறது. சமய ஈடுபாடு, கலை இலக்கியம் இது போன்ற பலவற்றில் ஆற்றலுள்ளவர்களும், ஈடுபாடு உள்ளவர்களும் மட்டக்களப்பில் அதிகம் உள்ளனர். குருக்களின் தொகையும் அங்கு அதிகம். ஆகவே, தனியாகப் பிரிந்துள்ள திருகோணமலை தன்னை வளர்த்துக் கொள்ள நீண்ட காலமெடுக்கும். ஆனாலும் நிச்சயம் நாம் வளரத்தான் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 46வது உலகத் தொடர்பாடல் தினத்திற்கான திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்களின் செய்தி

# வார்த்தையும், நிசப்தமும்: மறைத்தூதின் பாதை

• (கடந்த இதழ்த் தொடர்)

இறைவார்த்தைப் பரிமாற்றம் அல்லது தியானம், இறைவேண்டல்களுக்கான தருணங்கள், நிசப்தத்திற்கான வெற்றிடத்தை உருவாக்குதல் போன்று ஆழ்ந்த சிந்தனைக்கும், நம்பிக்கை தரும் வினாவுதலுக்குமான நேரத்தைக் கண்டு கொள்வதற்காக மக்களுக்கு உதவக்கூடிய சமூக இணை வேலைத் திட்டங்கள் மற்றும் பல்வேறு வலையமைப்புகள்மீது கவனம் குவிக்கப்படல் வேண்டும். தமது சொந்த உள்ளார்ந்த வாழ்விற்கு நேரம் ஒதுக்குவதை புறக்கணிக்காத உரையாடலில் பங்கு பற்றும் வரையில் விவிலிய வசனத்திற்கு மேற்படாத சுருக்கமான சொற்றொடரில் மிகுதியான சிந்தனைகள் பரப்பப்படலாம்.

எல்லாப் பொருட்களுக்கும் அர்த்தம் வழங்குகின்ற உண்மையையும், தம்மையும் மீளக் கண்டுபிடிப்பதற்கு மக்களுக்கு உதவுகின்ற அனுகூலமான நிலைமைகளாக ஏகாந்தத்தையும், நிசப்தத்தையும் பல்வேறு சமயப் பாரம்பரியங்கள் கருதுவது ஆச்சரியம் தரத்தக்கதாக இல்லை. விவிலிய வெளிப்படுத்துகையில் கடவுள் வார்த்தைகளின்றியே பேசுகின்றார். கிறிஸ்துவின் சிலுவையானது கடவுள் தமது நிசப்தத்தில் பேசுவதையே விளக்கி நிற்கின்றது. கடவுளின் திரு மகனின் உலகப் பயணத்தில் முடிவு செய்யும் ஆற்றலுள்ள ஒன்றாக, எல்லாம் வல்ல தந்தையின் தொலைதூர அனுபவமாக கடவுளின் நிசப்தம் விளங்குகிறது. மனுஉருவெடுத்த வார்த்தை, கடவுளின் நிசப்தம் அவரது ஆரம்பகால வார்த்தைகளை நீட்டிச் செல்கிறது. அந்தகார கணப்பொழுதுகளில் பரமரகசியமான தனது நிசப்தத்தின் ஊடாக அவர் பேசுவார். (Verbum Domini 21) கடவுளின் அதிஉயர் கொடையாக வழங்கப்பட்ட கடவுளின் அன்பின் சொல்லாற்றல் சிலுவையின் நிசப்தத்திலேயே பேசுகின்றது. இறைமகனின் இறப்பின் பின்னர் உலகம் முழுவதும் பெரும் நிசப்தம் நிலவுகின்றது. "புனித சனிக்கிழமையன்று அரசன் உறங்கும் போது மனித உடலில் உறங்கிய கடவுள் காலாதி காலமாக உறங்கியவர்களை உயிர்ப்பித்து உயர்த்தினார்". கடவுளின் குரல் மானிட இனத்தின் மீதான அன்பில் தோய்ந்ததாக மீள ஒலிக்கிறது.

நிசப்தத்தில் கடவுள் எம்முடன் உரையாடுகிறார் என்றால், மறுதலையாக கடவுளுடன் கடவுளைப்பற்றி நிசப்தத்தில் நாம் உரையாடத்தக்க சாத்தியக் கூறுகளைக் கண்டறிய வேண்டும். "கடவுளின் நிசப்தத்தினுள் எம்மை அறிமுகமாக்குகின்றதும், எம்மை விலை கொடுத்து மீட்டுக்கொள்ளும் வார்த்தை எங்கு அவதரித்ததோ அங்கு எம்மை இட்டுச் செல்கின்றதுமான ஆழ்ந்த சிந்தனையாக உருவெடுக்கும் நிசப்தம் எமக்குத் தேவைப்படுகிறது." (6 ஐப்பசி 2006ல் சர்வதேச இறையியலாளர் ஆணைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவுடனான திருப்பலியின் போது திருத்தந்தை ஆற்றிய மறையுரையிலிருந்து) கடவுளின் கம்பீரத்தையும், ஆடம்பரத்தையும் பேசவிளையும்போது எமக்கு வார்த்தைப் பஞ்சம் ஏற்படும்; நிசப்தமான ஆழ் சிந்தனைக்கு இடம் வகுக்கும். இதற்கு ஆழ் சிந்தனையிலிருந்து அதன் உள்ளார்ந்த சக்தியுடன் மறைபரப்பும் அவசர உணர்வு, வலிந்து ஈர்க்கின்ற கடமைப் பொறுப்பு முகிழ்ந்தெழும். தந்தையுடனும் அவருடைய மகன் இயேசுக்கிறிஸ்துவுடனும் நாங்கள் கொண்டுள்ள நட்புறவை நீங்களும் கொண்டிருக்குமாறு நாங்கள் கண்டதை, கேட்டதை உங்களுக்கு அறிவிக்கின்றோம். (1யோவான் 1:3)

நிசப்தத்திலான ஆழ்ந்த சிந்தனையானது எமது அயலாரை நோக்கி எம்மை இட்டுச் செல்கின்றவரது அன்பின் ஊற்றினுள் எம்மை ஆழ்த்துகின்றது. இதனால், அவர்களது துன்பத்தை நாம் உணரலாம். அவர்களுக்குக் கிறிஸ்துவின் ஒளியை அவரது வாழ்வின் செய்தியை, அவரது முழு அன்பின் கொடையை நாம் வழங்கலாம்.

நிசப்தமான ஆழ்ந்த சிந்தனையில் யாரால் இந்த உலகம் படைக்கப்பட்டதோ அந்த ஆதியும் அந்தமுமற்ற வார்த்தை முன்னொருபோதுமில்லாச் சக்தி நிறைந்ததாகத் தோற்றம் பெறுகிறது; அத்துடன், சொல்லாலும் செயலாலும் எமது வரலாற்றினூடே இறைவன் வெற்றிகரமாக நிறைவு செய்துவரும் மீட்புத்திட்டத்தை நாம் உணர்ந்து கொள்ளவும் முடிகிறது. உள்ளார்ந்த பிணைப்புடனான சொற்களாலும் செயல்களாலும் தெய்வீக வெளிப்படுத்துகை நிறைவு செய்யப்பட்டதை 2ம் வத்திக்கான் சங்கம் எமக்கு நினைவூட்டி நிற்கின்றது. வார்த்தைகளினால் தெரியப்படுத்தப்பட்ட போதனைகளையும் உண்மைகளையும் மீட்பு வரலாற்றில் இறைவனால் எழுதப்பட்ட செயல்கள் தெளிவுபடுத்தி உறுதிப்படுத்தி நிற்கின்றன. அதேவேளை, செயல்களையும் அவற்றில் அடங்கியுள்ள பரம இரகசியத்தையும் வார்த்தைகள் வெளிப்படையாகத் தெரிவிக்கின்றன.

(Dei Verbum 2)

நடுவராக இருந்து செயலாற்றுபவரும், எல்லாவகை வெளிப்படுத்துகையின் பூரணத்துவமுமான நாசரேத்தூர் இயேசுவிலேயே மீட்புத்திட்டம் உச்சத்தையடைகிறது. இறை தந்தையின் உண்மையான திருமுகத்தை எங்களுக்குக் காண்பித்தவர் அவரே. பாவத்தளையிலிருந்தும், மரணத்திலிருந்தும் எம்மை மீட்டு கடவுளின் பிள்ளைகளுக்குரிய சுதந்திரத்திற்கு எம்மை இட்டுச் சென்றது அவரது சிலுவையும், உத்தானமுமேயாகும். மானிட இருப்பின் அர்த்தம் பற்றிய அடிப்படை வினாவுக்கான அமைதியற்ற மனித மனத்திற்கு அமைதியைத் தரத்தக்க விடையானது கிறிஸ்துவின் பரம இரகசியத்திலேயே கிடக்கின்றது. திருச்சபையின் மறைபரப்புப்பணி இந்த பரம இரகசியத்திலேயே முகிழ்க்கின்றது. இந்தப் பரம இரகசியமே மானிட மகத்துவத்தை மேன்மைப் படுத்துவதோடு நீதியையும், அமைதியையும் கட்டியெழுப்புகின்ற அன்பிற்குச் சாட்சிகளாக நம்பிக்கையையும், பாவமீட்பினையும் பறைசாற்றுவோராக கிறிஸ்தவர்களைத் தூண்டி நிற்கின்றது.

தொடர்பாடலைப் பற்றிக் கற்பதென்பது பேசுவதைப்போன்று செவிமடுக்கவும், ஆழ்ந்து சிந்திக்கவும் கற்பதாகும். மறைபரப்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இது மிகவும் முக்கியமானதாகும். இன்றைய உலகில் இறைமகன் இயேசுவை புதுப்பிக்கப்பட்ட அதிகார பூர்வமாகப் பறை சாற்றுவதற்குத் திருச்சபையின் தொடர்பாடல் பணியில் ஒன்றிணைந்த அத்தியாவசிய மூலங்களாக நிசப்தமும், வார்த்தையும் விளங்குகின்றன. அன்னை மரியின் நிசப்தம் "வார்த்தைக்குச் செவிமடுத்தது. அதனால் பூத்துக் குலுங்கியது." (1 புரட்டாதி 2007ல் லொறெற்றோவில் மரியன்னையின் திருத்தலத்தில் செபித்த செபத்திலிருந்து) அந்த அன்னையிடமே சமூக தொடர்பாடல் வழிமுறைகளூடாக திருச்சபை முன்னெடுக்கின்ற எல்லா மறைபரப்புப் பணிகளையும் நான் ஒப்புவிக்கின்றேன். ■





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிர்வாதப்பரின் வாழ்க்கை வரலாறு

அருட்சகோதரி மேரி ஜெனா OSB

# காலடித் தடங்கள்... 11



## சகோதரர் பீட்டரும் விளக்கும்

புதிய ஆச்சிரமமான "மொன்டே கஷினோ" வின் வேலைகள் நிறைவுபெற்று துறவிகள் தங்கள் இயல்பான வாழ்க்கையில் ஈடுபட்டனர். பெனடிக்ட் எப்பொழுதும் துறவிகளைக் கண்காணித்துக் கொண்டிருந்தார். உலக வாழ்க்கையை விட்டு துறவிக்கான உடையை அணிவதில் ஒரு மனிதன் நிறைவானவன் அடைவதில்லை. துறவி பீட்டரின் மேல் எப்பொழுதுமே விசேட கவனம் செலுத்தி வந்தார் பெனடிக்ட்.

"சகோதரர் பீட்டர்"......... பெனடிக்ட் தொடர்ந்தார்,

"நான் மாலை உணவை உட்கொள்ளப் போகிறேன். இங்கு மிகவும் இருட்டாக உள்ளது. விளக்கொன்றை ஏற்றிப் பிடித்துக் கொள்ளும்"

"இப்பொழுதே செய்கிறேன்". விரைந்து சென்று எரியும் விளக்கொன்றுடன் வந்தார் பீட்டர். நிமிடம் ஒன்று கடந்ததும் தன் பொறுமையை இழக்கலானார் பீட்டர். தன் கையிலுள்ள விளக்கை நோக்கினார்; அமைதியாக உண்டுகொண்டிருக்கும் பெனடிக்டையும் நோக்கினார்.

'தந்தை என்னை ஒரு வேலைக்காரனைப் போல் நடத்துகிறார். நான் ஒரு சட்டத் தரணியின் மகன், உயர் கல்வி கற்றவன், இந்த விளக்கை ஏந்துவதைவிட வேறு முக்கியமான வேலைகளை என்னால் செய்யமுடியும். வேறு யாரிடமாவது இவ்வேலையைக் கொடுத்திருக்கலாமே.......'

என்ற எண்ணங்கள் உருண்டோடிக் கொண்டிருந்தன.

பீட்டரின் மனதிலுள்ள எண்ணங்களை அறிந்த பெனடிக்ட் கரண்டியைக் கீழே வைத்து விட்டு

"உன் இதயத்தில் சிலுவை அடையாளமிடு, சாத்தானுக்கு இடங்கொடாதே" அதட்டிக் கூறினார். பயத்தில் ஓரடி பின்சென்ற பீட்டரின் முகத்தில் கோபம் பீறிட்டெழுந்தது.

'ஒரு பிரசித்தி பெற்ற சட்டத்தரணியின் மகனிடம் இவர் இப்படியா பேசுவது? அத்துடன், அடுத்தவர்களின் எண்ணங்களை வாசிப்பது அநாகரிகமில்லையா?' என்று தனக்குள்ளே கேட்டுக் கொண்டார்.

உடனடியாகத் தனது இருக்கையிலிருந்து எழுந்து கொண்ட பெனடிக்ட்,

"விளக்கை கீழே வை, ஏனைய சகோதரர்களைக் கூப்பிடு. இன்றிலிருந்து இவ்வேலையை நீர் செய்யவேண்டியதில்லை".

சிறிது நேரத்தில் ஆச்சிரமம் முழுவதும் இச் சம்பவம் பரவியது. மேலுங் கோபம் கொண்ட பீட்டர்

"நான் இங்கு வராமலே இருந்திருக்கலாம். என்னில் எந்தப் பிழையும் இல்லையே. நான் நினைத்தவற்றில் எந்தத் தவறுமில்லை...."

என்று நினைத்தவாறு வெளியில் நடந்து கொண்டிருக்கையில் ஒரு சிறிய அறையில் படுத்துக் கொண்டிருந்த துறவி லூக்கை பீட்டர் கண்டார். சில நாட்களுக்கு முன்பு வயலில் வேலை செய்து கொண்டிருக்கையில் இடறிவிழுந்து காலில் உளுக்கு ஏற்பட்டதால் நடக்கமுடியாமலிருந்தார்.

"உள்ளே வாரும் பீட்டர். என்ன, உமது முகம் வாட்டமாயுள்ளது?" சகோதரர் லூக் வினவினார்.

"இன்னும் சிறிது நேரத்தில் நீரே தெரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வீர். நான் வருகிறேன்" என்று கூறி அவ் விடத்தை விட்டு நீங்க முயன்றார் பீட்டர்.

"நான் எழுந்து இருப்பதற்கு சிறிது உதவி செய்யமுடியுமா?"

பீட்டரைத் தன்னருகில் அழைக்கும் நோக்குடன் உதவியொன்றைக் கோரினார் லூக். பீட்டரும் மறுப்பின்றி உதவினார். ஆனால், லூக் பீட்டரின் கரங்களை இறுகப் பற்றியவாறு என்ன நடந்தது என வினவினார். யாரிடமாவது தனது நியாயத்தைக் கூறவேண்டுமெனவிருந்த பீட்டரும் நடந்தவைகளனைத்தையும் கூறினார்.

"கவலைப்பட வேண்டாம்". மென்மையாகத் தொடர்ந்தார் லூக் "எனதருகில் உட்காரும். சட்டத்தை மீறுவதாக நினைக்க வேண்டாம். வருத்தமுற்றுள்ள ஒருவருடன் இருப்பது நியாயமானதே" பீட்டர் அவரருகில் அமர்ந்தார்.

"உம்மிடம் நானொரு கதை கூறவேண்டும். இக்கதையின் மூலம் உமது மனம் ஆறுதலடையலாம்" தொடர்ந்தார் லூக்....

"சில வருடங்களுக்கு முன் எனது தந்தை பெனடிக்ட் சுபியாக்கோவில் 12 ஆச்சிரமங்களை வழிநடத்திக் கொண்டிருந்தார். அப்பொழுது, ஓர் இளைஞன் துறவியாக விரும்பி அவ்வாச்சிரமத்தில் இணைந்து கொண்டான். ஆனால், சில வாரங்களில் அவ்விளைஞன் செபத்தில் ஆர்வமின்றி இருப்பது தெரிந்தது. ஏனையவர்களைப் போன்று அவனும் தினமும் செபக்கூடத்திற்குச் சென்றான்; சங்கீதங்களைப் பாடினான்; கடினமாக வேலை செய்தான்; நாள் முழுவதும் அமைதியைக் கடைப்பிடித்தான். ஆனால், தியான நேரத்தின் போதும், மனதினால் செபிக்கும் போதும் அவனால் செபக்கூடத்தில் இருக்கமுடியவில்லை. வெளியில் எழுந்து சென்று விடுவான். இல்லையேல், வயலில் வேலை செய்து கொண்டிருப்பான்" ஆச்சரியத்துடன்

"அந்தத் துறவியின் பெயர் என்ன?" வினவினார் பீட்டர்.

ஆனால், அதற்குச் செவிமடுக்காதது போன்று தொடர்ந்தார் லூக்.

"எமது தந்தை பெனடிக்ட் இதனைக் கவனித்து வந்தார். அவரது பிழையை பல தடவை சுட்டிக்காட்டி, தியானம் செய்யும் முறையைக் கற்றுக் கொடுத்தார். ஆனாலும், அது இரண்டு நாட்களுக்கு மேல் பயனளிக்கவில்லை. மீண்டும் அவ்விளைஞன் தன் பழைய நடவடிக்கைகளில் ஈடுபட்டான். ஒருநாள் தியான நேரத்தின் போது தந்தை பெனடிக்ட் அவ்விளைஞனை நோக்கினார். அவனருகில்




வாளெடுத்தவன்
வாளினாலே மாள்வான்
என்றால்.....
துப்பாக்கி ஏந்தியவன்!
. . . . . . . ?

சாத்தான்கள் வேதம் ஓத
சாமிகள் சமாதிகளாக
சத்தியங்கள் பொய்த்துப் போக
ஒட்டியுலர்ந்து போன
ஒரு சோடித் தனங்களில்
தாடை வலிக்கும் வரை
உறிஞ்சிச் சோர்ந்து
ஓவென்று அழுகிறது அது.


காலத்தின் சோகங்களை
கண்ணீராய் உதிர்க்கின்றன
அவள் விழிகள்
குருட்டு வெளவால்கள்
மோதிச் செல்கின்றன
மயானங்களிலிருந்தும்
விரட்டப்பட்ட நரிகள்
தொலைவில் ஊளையிடுகின்றன
பசித்தீ சுட்டெரித்த இரைப்பைகள்
கருகிச் சுருண்டு கிடக்கின்றன

தொப்புள் உறவும்
தோள் சுமந்த பாசமும்
கட்டில் பந்தமும்
தொட்டில் நேசமும்
சூனியங்களாய்க்
காரிருள் கனவுகளாய்க்
காலடியில் விழுந்தன
ஆனால்
சமாதான யுத்தம்
சரித்திரமாயிற்று.

பைந்தமிழ்க்குமரன் டேவிட் - பாண்டிருப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குறும்(புப்)பா – 93

மறைமாவட் டம்பிரிப்பு கிழக்கில்
மந்தைகளோ பொருள்புரியாத் தவிப்பில்
சிறைமீண்டு களமாடிச் சென்றவர்போல் சிலர்பேச்சு
இதுஎதுக் கதுஎமக் காச்சு!

~ மலர் ~



சிறுவன் ஒருவன் நின்று கொண்டு அவனைத் தட்டி வெளிச்செல்லும் வாயிலைச் சுட்டிக் காட்டினான். அவனும் மெதுவாக எழுந்து சென்றான்.

'இது சாத்தானின் வேலையாகத்தான் இருக்கவேண்டும்' என நினைத்த பெனடிக்ட் அருகிலிருந்த மாரூஸிடம்,

"அச்சிறுவனைக் கண்டீரோ" என வினவினார். ஆனால், மாரூஸ்

"எவரையும் காணவில்லை".

மூன்று நாட்கள் பெனடிக்ட் அவ்விளைஞனுக்காக கடுமையாக இறைவனிடம் வேண்டினார். மூன்றாம் நாள் வழமைபோல் தியான நேரம் அந்தச் சிறுவன் அவ்விளைஞனை வெளியில் அழைத்துச் சென்றான். அன்று மாரூசும் அவனைக் கண்டார். தந்தை பெனடிக்ட் அன்று இவ்விளைஞனைப் பின்தொடர்ந்து சென்றார். இளைஞனோ வயல் வெளியில் உலாவிக் கொண்டிருந்தான்.

"என்னால் அவ்விளைஞனின் நிலையை விளங்கிக் கொள்ள முடியும்". தலையைத் தாழ்த்திய வாறு சோகத்துடன் நடந்தார் பீட்டர்.

"என்னாலும் பல தடவை செபிப்பது கடினமாக இருந்தது. எங்காவது எழுந்து செல்ல வேண்டும் போலிருக்கும்" "ஆனால், எமது தந்தை அதற்கெல்லாம் இடங்கொடுக்கமாட்டார்" தொடர்ந்தார் லூக்... "தன் துறவிகளை சாத்தான் ஆட்கொள்வதை அவர் ஒரு போதும் அனுமதிக்க மாட்டார். உடனே அவர் ஒரு தடியை முறித்து அவ்விளைஞனின் முதுகில் ஓங்கி அடித்தார்".

"தந்தை பெனடிக்ட் அவ்விளைஞனை அடித்தாரா?......." ஆச்சரியத்துடன் இரு விழிகளையும் விரித்தபடி "என்னால் நம்பவே முடியவில்லை" என்றார் பீட்டர்.

"ஆம். உண்மையே, ஆனால் அதன் பின் அக்குட்டிச் சாத்தான் அவ்விளைஞனை ஆட்கொள்ளவில்லை. அன்றிலிருந்து அவ்விளைஞன் முழு மனதுடன் தியானத்தில் ஈடுபட்டான்" தன் கதையைக் கூறிமுடித்தார் சகோதரர் லூக். சகோதரர் பீட்டர் அமைதியில் உறைந்திருந்தார்.

சில நிமிடங்களுக்கு முன் தனக்கு நிகழ்ந்தவற்றை எண்ணிப் பார்த்தார். "நிச்சயமாக இதுவும் சாத்தானின் வேலையே. நான் உடனடியாக

12ம் பக். பார்க்க




ஜெருசலேம் நகர் யூத மக்களின் இதயமென்றால் மொரியாமலையில் எழுப்பப்பட்ட ஆலயம் அவ்விதயத்தின் துடிப்பென்பர்.

ஆபிரகாமின் விசுவாசம் சோதிக்கப்பட்ட மலை இதுதான்? அவரது மகன் பலியாகக் கேட்கப்பட்டதும் அவர் அதற்குத் தயாரானபோது அது தடுக்கப்பட்டு அவரது விசுவாசம் பாராட்டப்பட்டதும் இங்குதான். ஒவ்வொரு யூதனும் ஆண்டிற்கொருமுறை இக்கோமிலுக்குச் சென்று வர வேண்டும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இப்பகுதியைத் தாவீதரசர் விலைக்கு வாங்கி இங்கு பலிபீடம் அமைத்தார். அவரது மகனான சாலமோன் மன்னன் காலத்தில் தொடங்கப்பட்ட ஆலயம் முடிய சுமார் ஏழரை ஆண்டுகள் ஆகின. கி.மு.587ம் ஆண்டில் இவ்வாலயம் பபிலோனிய அரசன் நபுக்கதனோசோரால் அழிக்கப்பட்டது. மாமன்னன் ஏரோதன் காலத்தில்தான் இது மீண்டும் புதுப்பிக்கப்பட்டு விரிவாக்கப்பட்டது. இப்பணி கி.பி.63ம் ஆண்டில் முடிந்ததென்பர். இதன் உட்பகுதியை அலங்கரிக்க பதினெட்டு மாதங்கள் ஆயினவாம். வெளிப்புற வேலைகள் முடிய எட்டு ஆண்டுகள் ஆயினவாம். கி.பி.70ம் ஆண்டில் உரோமையர்களால் இவ்வாலயம் தரைமட்டமாக்கப்பட்டது. இயேசு கூறியபடி 'கல்லின் மேல் கல் இராதபடி' இடிக்கப்பட்டது. 7வது நூற்றாண்டில் மொரியா மலை இஸ்லாமியர் வசமானது. கோமிலைச் சார்ந்த அனைத்துப் பகுதிகளும் அவர்களது கட்டுப்பாட்டுக்குள் வந்தன. பழைய ஜெருசலேமில் ஆறில் ஒரு பங்கு இவர்கள் உடைமையானது.

இன்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி விழா, கடந்த 04.08.2012ல், மட்.சாள்ஸ் மண்டபத்தில் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருள் தந்தை யோசப் பொன்னையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர்களாக... அருட்தந்தை J.S. மொறாயஸ் (மறைக்கோட்ட முதல்வர், மட்டக்களப்பு), அருட்தந்தை T.A. ஜூலியன் (இயக்குனர், மறைக்கல்வி நடுநிலையம், மட்டக்களப்பு), அருட்தந்தை கிறைட்டன் அவுட்ஸ்கோன் (இயக்குனர், எகெட் நிறுவனம்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

உரிய நேரத்தில் விழா ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது. மண்டப வாசலில் தமிழ் முறைப்படி ஆரத்தி எடுத்து சிறப்பு விருந்தினர்கள் வரவேற்கப்பட்டனர்.

மங்கல விளக்கேற்றல், இறைவணக்கம் ஆகியவற்றைத் தொடர்ந்து அருமையானதோர் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. அதையடுத்து சமூகத் தொடர்பு நிலைய இயக்குனர் அருட்தந்தை லெஸ்லி ஜெயகாந்தன் வரவேற்புரை வழங்கினார். ஊடகங்களுக்கும் சமூகத்துக்கும் இடையேயுள்ள தொடர்பை எடுத்துக்காட்டி, ஊடகங்கள் சரியான வழியில் செல்ல வேண்டியதன் அவசியத்தையும் அவர் இந்த உரையில் சுட்டிக்காட்டினார்.

## மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத்தொடர்பு நிலையம் நடாத்திய 46ஆவது உலகத் தொடர்புதின விழா





வரவேற்புரையைத் தொடர்ந்து தலைமையுரை இடம்பெற்றது. அதிவண. ஆயர் அவர்கள் இந்தப் பேச்சுப் பிரதியை நன்கு தயாரித்திருந்தார். அதனால் அவரது பேச்சு கச்சிதமாக அமைந்தது. தலைமையுரையைத் தொடர்ந்து மற்றுமொரு நடன நிகழ்ச்சி இடம்பெற்றது. இதுவும் சிறப்பாக அமைந்தது.

அடுத்து சிறப்புரை இடம்பெற்றது. "மறைக்கல்வியும் ஊடகங்களும்;" என்னும் தலைப்பில் அமைந்த இச்சிறப்புரையை அருட்தந்தை சி.வி. அன்னதாஸ் வழங்கினார். சமகால நிகழ்வுகளில் அவருக்குள்ள பரிச்சயம் இந்த உரையில் நன்கு வெளிப்பட்டது. இன்றைய சமூகத்தில் 'மறைக்கல்வி' உரிய இடத்தைப் பெறவில்லை. கணினி யுகத்தில் வாழும் இன்றைய மக்கள் மறைக்கல்வியைப் புறக்கணிக்கும் நிலையை அவர் சுட்டிக்காட்டினார். பேச்சுப் பிரதி ஒழுங்காகத் தயாரிக்கப்பட்டிருந்ததால் அவரது பேச்சும் சிறப்பாக அமைந்திருந்தது.

அடுத்து "கலைஞர் கௌரவம்" என்ற முக்கிய நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் 40 ஆண்டுகாலமாக இடைவிடாது இலக்கியப் பணியாற்றிவரும;





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குறும்(புப்)பா – 94

வல்லுறவு வாள்வெட்டுக் கொள்ளை
வாழ்கின்ற காணிகளும் இல்லை
சொல்லாமல் கொள்ளாமல் சொத்துகளும் முடக்கமிவை
எல்லாமே "இறைமை"க்குள் அடக்கம்!

~ மலர் ~

'அன்புமணி' (இரா. நாகலிங்கம்) மற்றும் மறைக்கல்வி, கிறிஸ்தவ இலக்கியம் ஆகியவற்றில் தொடர்ந்து பணியாற்றிவரும் செல்வி. மெற்றில்டா இராஜேந்திரம் ஆகிய இருவரும் கௌரவிக் கப்பட்டனர். அன்புமணி பற்றிய பாராட்டுரையை "செங்கதிர்" கலை இலக்கிய மாத சஞ்சிகையின் ஆசிரியர் செங்கதிரோன் நிகழ்த்தினார். செல்வி. மெற்றில்டா இராஜேந்திரம் பற்றிய பாராட்டுரையை பெஸ்லியோ வாஸ் வழங்கினார். அதைத் தொடர்ந்து அதிவண ஆயர் யோசப் பொன்னையா இவர்களுக்கு பொன்னாடை போர்த்தி, பொன்மாலை சூட்டிக் கௌரவித்தார். இவர்கள் இருவருக்கும் கணிசமான அன்பளிப்பு காசோலையாக வழங்கப்பட்டது. இந்நிகழ்வைத் தொடர்ந்து, இலக்கியப் போட்டி களில் வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

**சிறுகதைப் போட்டி முதற்பரிசு** - **அருட்சகோதரி மேரிஜெனா**, மொறட்டுவை.
**கட்டுரைப் போட்டி முதற்பரிசு** – **செ. ஹாசியா**, மட்டக்களப்பு.

நன்றியுரையை நில்மினி கஜேந்திரன் வழங்கினார்.

இந்நிகழ்வின் சிறப்பம்சங்களைச் சுட்டிக்காட்ட வேண்டும். அளவான உரைகள் - கண்டபடி அலட்டாமல் பேச்சுப் பிரதிகள் மூலம் உரைகள் நிகழ்த்தப்பட்டமை, உரிய நேரத்தில் ஆரம்பித்து உரிய நேரத்தில் நிறைவடைந்த நிகழ்வு, நிகழ்ச்சிகளைக் கச்சிதமாகத் தொகுத்து வழங்கிய ஜூலியானா சில்வெஸ்டரின் சொல்வன்மை.

இவ்வாறு இந்நிகழ்வை சிறப்பாக அமைத்து வழங்கிய மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையத்தினர் நமது பாராட்டுக்குரியவர்கள். ○

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 63 முடிவுகள்**

**முதலாம் பரிசு - 400/=**
S. அசானி,
இல: 13A, 3ம் குறுக்கு,
கூளாவடி, மட்டக்களப்பு.

**இரண்டாம் பரிசு - 300/=**
வி. கிளாரட்,
இல: 77, மத்திய வீதி,
வரோதய நகர், சாம்பல் தீவு,
திருகோணமலை.

**மூன்றாம் பரிசு - 200/=**
அ. டெபோறா யூடி,
இல: 6, 6ம் குறுக்கு,
பிள்ளையார் கோவில் வீதி,
கல்லடி வேலூர், மட்டக்களப்பு.

10ம் பக். தொடர்...

தந்தையிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். இனிமேல் எந்தச் சிறிய வேலையாயினும் மனங்கோணாமல் செய்யவேண்டும்"

சிறிய இருமலுடன் "சகோதரர் பீட்டர், நித்திரை யாகிவிட்டீர்களா?" வினவினார் லூக்.

"ஓ! இல்லை, நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்றார் பீட்டர்..... "அது நல்லதே" மீண்டும் படுத்துக்கொண்டார் லூக்.

"அந்தத் துறவி, உம்முடைய கதையில் வந்தவர் இன்னும் உயிருடன் இருக்கிறாரா?" ஆர்வத்துடன் வினவினார் பீட்டர்.

சகோதரர் லூக் தலையை அசைத்தவாறு "ஆம், இறைவனின் அருளால், உடைந்த காலுடன் உம்முன் படுத்துக்கொண்டிருக்கிறார். அவருக்காக நீர் சிறிய செபம் ஒன்றைச் சொல்லும். விரைவில் குணமடைய வேண்டுமென.

தொடரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “அன்புமணி” அண்ணனுக்கு என்னுடைய வாழ்த்துகள்!

‘அன்புமணி’ என்னும் அழகான புனைப் பெயரில்
இன்றும் எழுதிவரும் இரா. நாகலிங்கமவர்
அன்பான மனிதராவார்... அடுத்தவரின் மனம் நோக
என்றும் இயங்காத இவர் பெருமை ஊரறியும்,
ஆரையம் பதியினிலே அன்னை தந்தை பெயர் சிறக்க
வேரை நிலைநிறுத்தி, விண்ணனாய் “இலக்கியத்தில்
சூரனிவன்!” என்று புகழ் சூடியிந்தப் பாரெல்லாம்
“ஆரிந்த அன்புமணி ?” எனக்கேட்க வாழ்கின்றவன்.
மும்மொழியில் பேசவல்ல மூத்த எழுத்தாளன்
தம்முடைய சோலிகளைத் தள்ளி வைத்துப் பிறர்வாழ
தம்மால் முடிந்தவற்றைத் தாராளமாய்ச் செய்து
இம்மண்ணின் மன்னனாக எம்மோடு வாழ்பவன்.
சின்ன வயதிருந்தே சிறப்பாகக் கல்வியிலே
எண்ணிடவே முடியாத ஏற்றங்களைக் கண்டு,
உன்னத பதவிகளில் உயர்வோடு பணியாற்றி
தன்சேவை முடிந்தவுடன் தமிழ்வாழப் பணிபுரிந்தான்.


கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள் என எழுதிக்
குவித்ததோடல்லாமல் நாடகம் பல எழுதி,
தயாரித்து மேடையேற்றி தானுமொரு நடிகனாக
அயராது தமிழ்த் தாய்க்கு ஆற்றிய அரும்பணிகள்
காலத்தால் அழியாத காவியமாய் நிலைத்திருக்கும்.
வாழும் இளம் கலைஞர் வரலாற்றில் இடம் பிடிக்க,
பாடுபட்டு, அவர் படைப்பைப் பண்படுத்தி எந்நாளும்
நாடு புகழ நல்லறிஞர் மத்தியிலே பரவச் செய்து,
அர்ப்பணிப்போடு செயல்பட்ட அன்புமணி,
தற்பெருமை இல்லாத தமிழறிஞன் எனச் சொன்னால்,
தப்பேதும் இருக்காது... தமிழுலகில் இவன் போல
அற்புதமானவர்கள் அரிதென்பேன்... இவரெமக்கு
எப்போதும் தேவையதால் இறைவனிடம் கேட்கின்றேன்
இப்புவியில் பல்லாண்டு இவர் வாழ வரம் தருவாய்!
நோய் நொடிகள் அணுகாமல் நூறாண்டு வாழவேண்டும்,
பாயில் விழுந்துருண்டு பலர் பார்த்துப் பரிகசிக்க
செய்யாமல் என்றுமிவர் சோர்வு, உடற் தளர்ச்சி
பொய்த்து, மனம் குன்றாமல் பொழுதெல்லாம் உற்சாகம்
கரைபுரள மென்மேலும் கலை வளர்த்துச் சேவையாற்ற
பிறையாக அல்லாமல் பூரண நிலவாய் வாழ்வில்
பொலிவோடு வாழ்ந்து தமிழ்ப்பூமியெல்லாம் தமிழ் மணக்க
ஒளி வீச வேண்டுமென்று கவிஞன் நான் வாழ்த்துகிறேன்.



கவிஞர் செ. குணரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓர் அதிபரின் டயரியிலிருந்து ...

– சிறுகதை –

அதிபர் மகேந்திரனை உங்களுக்குத் தெரியாது. 1963.10.24ல் பிறந்து எழில் வளம் கொஞ்சும் கிராமமொன்றில் இளமைப் பருவத்தைக் கழித்து, எட்டு மைல்கள் பழைய சைக்கிளில் பயணித்து, பெரிய பாடசாலையில் உயர் கல்வியைக் கற்று, பல்கலைக்கழகம் கிடைத்தபோதும் வறுமையால் தவறவிட்டு, வறுமையுடன் போராடி வெளிவாரிப் பட்டம் பதவியென்று உயர்ந்து, இன்று நிர்வாகத்திறன் கொண்ட ஒரு நல்ல அதிபராக இருப்பவர். எனது மிக நெருங்கிய நண்பர். அவரைக்காண பாடசாலைக்குள் நுழைகிறேன். ஆசிரியர்களின் கற்பித்தல் சத்தங்கள் மட்டுமே கேட்கின்றது. அவரது மேசைக்கு முன்னே பவ்வியமாகக் குந்தியிருக்கின்றேன்.

“கொஞ்சம் இருங்க, இந்தப் பதில் கடமைச் சிற்ற யோகா ரீச்சரிட்ட குடுத்திற்று வாறன்” என்றவர் எழுந்து செல்ல, மேசை மூலையில் இருந்த டயரியை மெதுவாகப் புரட்டுகிறேன். தவறு... தவறு... என்று மூளை தந்தியடிக்கிறது...... ஆர்வமோ விடவில்லை.

**2012 May 01 Tuesday:**

இன்று காலை 10.30 மணிக்குக் கல்வி பொருளாதார சமூக மேம்பாட்டு ஒன்றிய விழாவில் கலந்து கொண்டேன். ஒன்றியத்தின் தலைவர் திருமதி. விஜயகலா மகேஸ்வரனை எண்ணி பெரிதும் வியந்து போனேன். ஏழை மாணவர் கல்விக்காகவும் வறிய குடும்பங்களது பொருளாதார மேம்பாட்டுக்காகவும் விதவைப் பெண்களது வாழ்க்கைக்காகவும் திருமதி. விஜயகலா செய்யும் சேவைகளையறிந்து பெரிதும் மகிழ்ந்தேன். கணவன் வங்கியொன்றில் இலிகிதர். ஒரேயொருமகன், எட்டாம் வகுப்பில் படிக்கிறான். இவளால் தன்னையே அர்ப்பணித்து எப்படி இத்தகைய பரந்துபட்ட சமூக சேவையைச் செய்ய முடிகிறதென ஆச்சரியப்பட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைந்தமிழ்க்குமரன் டேவிட்
பாண்டிருப்பு.

சேவையின் செம்மல் விஜயகலா என்று எனது உரையில் விழித்துப் பேசினேன். இனிமையாக உரையாடி உபசரித்தாள். மதிய உணவு பிரமாதமாக வழங்கினாள். பிற்பகல் 1.45ற்கு வீடு வந்தேன். ஏஞ்சலா திருமண மண்டபத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

பிற்பகல் 3மணிக்கு A/L மாணவர்களுக்குத் தமிழ் வகுப்பு எடுத்தேன் (இலக்கணம்).

## 2012 May 02 Wednesday

காலை 6.54ற்குப் பாடசாலை வரவுப் புத்தகத்தில் முதலாவதாக ஒப்பமிட்டேன். இரண்டு வருடங்களுக்கு முன் இறந்து போன கணவனின் ஆவியுடன் பேசவென புஷ்பராணி ரீச்சர் செல்வதாகக் கூறி அவளது லீவை சிவமணி தந்தாள். அதில் லீவுக்கான காரணம் வயிற்றுப் போக்கு என்று குறிப்பிடப்பட்டிருந்தது. சபாபதி மாஸ்டர் அனுப்பியிருந்த லீவில் மாமியின் திவசம் என்று இருந்தது. அவர் உமிச்சாக்குகள் ஏற்றிய லொறியுடன் திருமலை செல்வதாக சண்முகநாதன் கூறினான்.

காலைக் கூட்டத்தில் சீருடை சுத்தமாகவும் கழுத்துப் பட்டி காற்சப்பாத்துகள் கண்டிப்பாக அணிந்து வருவது பற்றிக் கூறினேன். காலைக் கூட்டம் கலைந்த போது தரம் 07 மாணவன் ஜெனிகரன் என்னிடம் வந்தான். "என்ன தம்பி" என்றேன், அழுதான், விக்கி விக்கி அழுதான். தந்தை குடிகாரன். மூன்று பிள்ளைகள். மூத்தவள் சுனாமியில் தொலைந்து போனாள். இவனும் ஒரு தங்கையும். 2010 கார்த்திகை ஒன்பதாம் திகதியன்று யாரோ ஒருத்தியுடன் அவன் தந்தை ஓடிப் போய்விட்டதாக தாய் அழுது புரண்டாள். அன்றுடன் அப்பா என்ற பந்தமும் அள்ளுண்டு போயிற்று. தாய் கடையப்பம் செய்தாள். பரசுராமன் டீ.எஸ் வீட்டில், மன்சூர் டொக்ரர் வீட்டில் சமையல், சட்டி பானை என்று தன்னிரு பிள்ளைகளுக்காக அலைந்தாள், முடியவில்லை. இந்த வருடம் தை மாதம் சவூதிக்குப் போய் விட்டாள். போகும் போது தன் தங்கையிடம் பிள்ளைகளை விட்டுச் சென்றாள். பழைய சோறு, வீட்டுவேலை, வசைகள், திட்டல், அதட்டல் என்று அவர்கள் அல்லாடினார்கள். சித்திரை மாதப் பள்ளி லீவுடன் பிள்ளைகள் அம்மம்மாவிடம் அடைக்கலமாயினர். ஆனால், "சீருடைகள், புத்தகப்பை, சப்பாத்து, புள்ளிப் பதிவேடு எதுவும் தரமாட்டேன் நாலு மாசமா உங்கள வெச்சிருந்து சாப்பாடு போட்டு வளத்ததுக்கு உங்கடையம்மா காசி தரவேணும்" என்று ஏசித்துரத்தி விட்டாளாம். சொல்லிச் சொல்லி அழுதான், மனம் வலித்தது.

பிற்பகல் மனைவி பிள்ளைகளுடன் கோயிலுக்கு சென்று வந்தது.

## 2012 May 03 Thuresday

காலை 6.57ற்குப் பாடசாலையில் ஒப்பமிட்டு காலைக்கூட்டம் முடிவுற்றதும் டிசிப்பிளின் ரீச்சர் சிவமதிக்கு முன்பாக ஏழெட்டுப் பிள்ளைகள் நின்றார்கள். அவர்களுள் அவனும் நின்றான். என்னிடம் ஓடி வந்தான். அடிவிழாமல் அவனைக் காப்பாற்றி வகுப்பிற்கு அனுப்பினேன் அதே பழைய செருப்புடன். 10 மணியளவில் 7ம் தர வகுப்பாசிரியரே அவனைக் கூட்டிக்கொண்டு வந்தாள். றிப்போட் புத்தகம் இவன் மட்டும் கொண்டுவரல என்று முறையிட்டாள். ஏதாவது செய்தேயாக வேண்டும் என்று நினைக்கிறேன்.

## 2012 May 04 Friday

முத்துராசா கிராமசேவகரைச் சந்தித்து ஜெனிகரனின் அவலத்தை எடுத்துக் கூறியது. இன்று அவசரமான அலுவல் இருப்பதால் நாளை சனிக்கிழமை இருவரும் அவனது சித்தியின் வீடு போய்ப் பேசி, இரு பிள்ளைகளது பொருட்களையும் புள்ளிப்பதிவேட்டையும் பெற்றுக் கொடுப்பதென்று தீர்மானித்தோம்.

## 2012 May 05 Saturday

காலை 8.30 மணிக்கு முத்துராசா கிராம சேவகர் வீட்ட போனது. கிணற்றடியில்

18ம் பக்.. பார்க்க..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மறைமாவட்ட முதல் ஆயரின் வாழ்க்கைத் தடங்கள்

— இன்பம் —

கிழக்கில் உருவாக்கப்பட்டுள்ள புதிய மறை மாவட்டத்தின் - மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் முதல் ஆயராக மட்டக்களப்பைச் சேர்ந்த பேரருள் தந்தை யோசப் பொன்னையா ஆண்டகை அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளாரென்பது அனைவரும் அறிந்த செய்தி.

2008 பெப்ரவரித் திங்கள் 19ம் நாள் திருத்தந்தை 16ம் ஆசிர்வாதப்பர் அவர்களால் ஆயர் நிலைக்கு உயர்த்தப்பட்டு திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் துணையாயராகக் கடந்த நான்கு ஆண்டுகளாகப் பணிபுரிந்த யோசப் பொன்னையா ஆண்டகை அவர்கள் தற்போது கிழக்கில் புதிய மறைமாவட்டமாக உருவாகியுள்ள மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் முதல் ஆயராக நியமனம் பெற்றுள்ளார். தமது மண்ணில் விளைந்த இந்தப் புனிதமான முதல் விளைவை கிழக்குப் பிரதேச மக்கள் பெருமகிழ்வுடன் கொண்டாடுகின்றனர். இவர் தம் பணிப்பொறுப்பை ஏற்கும் உத்தியோக பூர்வ நிகழ்வு இம்மாதம் (செப்டெம்பர்) 23ம் திகதி மட்டக்களப்பு மறைமாவட்டப் பேராலயத்தில் திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி கருதினால் யோசப் பிற்றரி ஆண்டகை அவர்கள் தலைமையில் இலங்கையின் பல மறைமாவட்டங்களையும் சேர்ந்த ஆயர்கள், குருக்கள், துறவிகள், விசுவாசிகள், அரச அதிகாரிகள், பல்சமய பிரதிநிதிகள் மற்றும் கிழக்குப் பிரதேச மக்கள் புடை சூழ நடைபெறவிருக்கிறது.



ஒரு மறை மாவட்டத்தில் தமது மக்களுக்குக் கிறிஸ்தவ மறை உண்மைகளை, விசுவாச சத்தியங்களைப் போதிக்கும் அதிகாரம் உள்ள போதகராக விளங்குபவர் ஆயரே. பரந்துபட்ட நிலப்பரப்பில் அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குறும்(புப்)பா – 95

ஒப்புக்காய்ப் பொய்ச்சிரிப்பு உதட்டளவில்
தப்பிக்க நன்றி சொல்லித் தலையசைத்து
அப்புறத்தி லவர்பெயரை அலங்கோலப் படுத்திச்சுகம்
எப்பொழுதுங் காணுஞ்சில ருண்டு

~ மலர் ~



பணிக்குத் துணையாகவே
குருக்கள், துறவிகள்,
தொண்டர்கள்,
போதகர்கள் உள்ளனர்.
உலகெங்குமுள்ள
ஆயர்களுக்கெல்லாம்
தலைமை ஆயராக
விளங்குபவர்
திருத்தந்தையாவார்.

ஆயர் என்பவர்
அதிகாரியன்று, தம்
மக்களுக்குப்
பணிசெய்பவர்... தமது
மக்களைப் பாதுகாத்துப்
பாராமரித்து
வழிநடத்துபவர்... தம்
மக்களுக்காகத் தன்னையே
இழக்க முன்வருபவர்...
தம் மக்களைச் செல்ல
வேண்டிய திசையில்
ஆற்றுப்படுத்தி
உடன்வருபவர்... 'நானே
நல்லாயன்' என்ற
கிறிஸ்துவின்
வாய்மொழிக்கு வாழும்
சான்றாக விளங்குபவர்.
இத்தகைய புனிதமிக்க,
பொறுப்புமிக்க
பணிவாழ்வை ஏற்று,
மறைமாவட்ட மக்களைத்
தலைமை தாங்கி
வழிநடத்தத் தம்மைக்
கையளித்துள்ள ஆயர்
அவர்களுக்கு இறைவன்
தமது அருள் வளங்களை
வாரி இறைத்து
ஆசீர்வதிக்க
வேண்டுமென
இறைஞ்சுகிறோம்.

திருகோணமலை
மறைமாவட்டம் உருவான
போதுஞ்சரி, அது
திருகோணமலை -
மட்டக்களப்பு
மறைமாவட்டமாக மாற்றம்
பெற்ற போதுஞ்சரி நமது
மறைமாவட்டத்தை
வழிநடத்திய ஆயர்கள்
வெளிநாட்டைச்
சேர்ந்தவர்களும் நமது
சகோதர
மறைமாவட்டத்தைச்
சேர்ந்தவர்களுமே.
இவர்களது தன்னலங்
கருதாத் தனிப்பெரும்
பணிகளே நமது மக்களின்
விசுவாச வாழ்வுக்கும்
இருப்புக்கும் காரணமாகும்.
ஏறத்தாள மூன்று
தசாப்தங்களாக
இந்நாட்டில் நடந்த
சொல்லவொண்ணாக்
கொடுமைகள், அழிவுகள்,
இயற்கைப் பேரிடர்களின்
போதெல்லாம் நமது
ஆயர்களின்
தன்னிகரில்லாப் பெரும்
பணிகள் இப்பிரதேச
மக்கள் அனைவருக்குமே
ஆறுதல் அளித்து
நம்பிக்கை நல்கியது.
அவர்கள் என்றென்றும்
நமது நன்றிக்கும்
போற்றுதலுக்கும்
உரியவர்கள். அந்தப்
பணிவாழ்வை நம்
மண்ணில் தொடர்ந்திட
இன்று நம்மத்தியில்
இருந்து ஒரு விதை
முளைத்து எழுந்துள்ளது...
நமது முன்னாள்
ஆயர்களால் அன்போடு
பாதுகாக்கப்பட்டு
வளர்க்கப்பட்டுள்ளது...
நிமிர்ந்து நிழல் கொடுக்கத்
தயாராகியுள்ளது.

ஆம், மட்டக்களப்பு
மறைமாவட்டத்தின் புதிய
ஆயர் நமது மண்ணில்
முளைத்த விதை.
மட்டக்களப்பிலிருந்து
வடக்கே 9km
தொலைவிலுள்ள
தன்னாமுனை என்னும்
பழம்பெரும் கிராமத்தைச்
சேர்ந்தவர்.
மட்டக்களப்பிலுள்ள
பாரம்பரிய கிறிஸ்தவக்
கிராமங்களில் ஒன்றாக
தன்னாமுனை
குறிக்கப்படுகிறது. அங்கே
புனித வளனாரின் பெயர்
கொண்ட ஆலயம்
அருள்பாலித்து நிற்கிறது.
அத்திருப்பதியில்
காலஞ்சென்றவர்களான
திரு. மத்தேஸ்
பொன்னையா, திருமதி.
மரியபூரணம்
பொன்னையா
தம்பதியினருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது மகனாக 1952ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12ம் நாள் பிறந்தார். ஏழுவருள் ஒருவரான இவருக்கு ஆறு சகோதர சகோதரிகள் உள்ளனர். இவரது மூத்த சகோதரர் ஒருவர் நமது மறைமாவட்டத்தில் முழுநேர மறைப்போதகராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். அவரது மகன் தற்போது நமது மறைமாவட்ட மறைக்கல்வி நிலையத்தின் இயக்குனராகப் பணிபுரிகிறார். ஆயரது சகோதரி ஒருவர் மரியாளின் பிரான்சிஸ்கன் மறைபரப்புச் சபையில் ஒரு துறவியாக விளங்குகிறார்.

தமது ஆரம்பக் கல்வியை தன்னாமுனை தூய வளனார் வித்தியாலயத்தில் கற்ற இவர் அப்போது தன்னாமுனைப் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய காலஞ்சென்ற அருட்தந்தை நோபட் ஒக்கஸ் அடிகளாரின் ஆற்றுப் படுத்தலின் கீழ் அக்காலத்தில் திருகோணமலையில் இருந்த வளனார் இளங் குருமடத்தில் இணைந்து கொண்டார். அங்கு உருவாக்கல் பயிற்சியுடன் திருகோணமலை புனித யோசப் கல்லூரியில் இடைநிலை மற்றும் உயர் நிலைக் கல்வியினைப் பெற்றுக் கொண்டார்.



1972ம் ஆண்டு மெய்யியல் கற்கை நெறிக்காக தமிழ் நாட்டில் உள்ள திருச்சி புனித பவுல் குருத்துவக் கல்லூரிக்குச் சென்று 1975ம் ஆண்டில் அதனை நிறைவு செய்து கொண்டு, இறையியல் கற்கை நெறிக்காக மேற்கிந்தியாவில் பூனே நகரில் உள்ள பாப்பிறைக் குருத்துவக் கல்லூரியில் இணைந்து நான்கு ஆண்டுகள் பயின்று நிறைவு செய்தார். இவ்வாறு தமது குருத்துவக் கல்வியையும் பயிற்சிகளையும் முடித்துக் கொண்டு நாடு திரும்பிய தந்தையவர்கள் 1980ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முப்பதாம் நாள் திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் பேரருள் தந்தை L.R. அன்ரனி ஆண்டகையவர்களால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அன்று முதல் மறைமாவட்டப் பங்குத் தளங்கள் பலவற்றிலும் சிறப்பான பணிகள் பல புரிந்து மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றுக்கொண்டார். 2001 முதல் 2006வரை தாண்டவன்வெளி காணிக்கை அன்னைப் பங்கில் இவர் பணிபுரிந்த காலப்பகுதியில்தான் பிரமாண்டமான புதிய ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

15ம் பக். தொடர் ....

மனைவியின் உடைகளைத் தோய்த்துக் கொண்டிருந்தார். முப்பது நிமிடங்கள் காத்திருந்து, அவரைக் கூட்டிக் கொண்டு விசாரித்து வீடு தேடிக் கண்டுபிடித்து, முன் கேற்றைத் திறந்து உள்ளே சென்று அழைப்பு மணியை அழுத்தினேன். ஜெனிகரனின் அன்ரி கதவைத் திறந்தாள். அதிர்ந்து விக்கி விறைத்துப் போனேன். சமூக சேவகி, சேவையின் செம்மல், மாதரசி என்று நான் புகழாரம் பாடிய விஜயகலாவும் கணவனும் நின்றனர், திரும்பினேன். மழையில் நனைந்த கோழிக்குஞ்சு போல பயந்து நடுங்கியபடி எனக்குப் பின்னால் ஜெனிகரனும் அவன் தங்கையும் நின்றனர். காளி கோலத்தில் காட்சிதரும் அவளைக் கண்டு எனக்கு வார்த்தைகள் எழவில்லை... நா வரண்டு தொண்டை காய்ந்து போனது.....

தொடர்ந்து வரிகளை வாசிக்க என்னால் முடியவில்லை. நெஞ்சடைத்தது, டயறியை மூடிவிட்டு எழுந்தேன். எதிரே தென்பட்ட ஆசிரியையிடம் அவசர அழைப்பொன்று வந்ததால் நான் செல்வதாக அதிபரிடம் கூறும்படி சொல்லிவிட்டு வெளியேறுகிறேன், மனம் கனத்துக் கிடக்கிறது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதின்மூன்றாம் ஆயர் மாமன்றத்தில் விவாதிக்கப்படவிருக்கும் கருத்துகள் வெளியிடப்பட்டன



கிறிஸ்தவ நம்பிக்கைப் பாரம்பரியங்களில் முறிவு இல்லாத வண்ணம் இயேசுவின் நற்செய்தியை இன்றைய உலகிற்கு எடுத்துரைக்கும் முயற்சியே புதிய நற்செய்திப் பணியாகும் என்று வத்திக்கான் அதிகாரியொருவர் கூறினார்.

வரும் அக்டோபர் 7 முதல் 28 வரை வத்திக்கானில் நடைபெறவுள்ள பதின்மூன்றாம் ஆயர் மாமன்றத்தில் விவாதிக்கப்படவிருக்கும் கருத்துகள் அடங்கிய நூலை செய்தியாளர்கள் கூட்டத்தில் வெளியிட்ட ஆயர் மாமன்றப் பொதுச் செயலாளர் பேராயர் நிக்கோலா எட்டெரோவிச் இவ்வாறு கூறினார்.

இந்த நூலை உருவாக்க உலகெங்கும் பரவியுள்ள 114 ஆயர் பேரவைகள், 13 கீழை ஆயர் பேரவைகள் மற்றும் 26 வத்திக்கான் அவைகள் இணைந்து செயற்பட்டன என்று பேராயர் எட்டெரோவிச் விளக்கம் அளித்தார்.

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் கூடியதன் 50ம் ஆண்டு நிறைவையும், கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி நூல் வெளியானதன் 20ம் ஆண்டு நிறைவையும் சிறப்பிக்கும் விதமாக, 13ம் ஆயர் மாமன்றம் அக்டோபர் மாதம் நடைபெறுகிறது. ■

உயர் கல்வித்துறையில் ஆர்வமும் ஆற்றலுமிக்க ஆயரவர்கள் பேராதெனிய பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவராகத் தம்மை இணைத்துக் கொண்டு கலைத்துறையில் கற்று இளங்கலைப்பட்டம் பெற்றார். பின்பு உரோமை நகருக்குச் சென்று உர்பான் பல்கலைக்கழகத்தில் விவிலிய இறையியல் கற்கை நெறியை மேற்கொண்டு முதுகலைப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். அதைத் தொடர்ந்து முனைவர் பட்டத்துக்காக யாழ். பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ நாகரீகத் துறையில் தம்மை ஆராய்ச்சி மாணவனாகப் பதிவு செய்துகொண்டு 'விவிலியத்தில் தூய பவுலின் கடிதங்கள்' எனும் தலைப்பில் ஆராய்ச்சியினை மேற்கொண்டு நிறைவு செய்தார்.

இவ்வாறு கல்விச் சிறப்பும் பணிச்சிறப்பும் உடையவரைத் தேடி பதவிகளும் பொறுப்புகளும் வருவதில் வியப்பில்லையல்லவா. 1993 முதல் 1996வரை மட்டக்களப்புத் திருப்பெருந்துறையிலுள்ள புனித வளனார் இளங் குருமட இயக்குனராகவிருந்து பல இளங் குரு மாணவர்களை உருவாக்கினார். 1996 முதல் 2001வரை கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தில் விவிலிய விரிவுரையாளராகவும் உருவாக்குனராகவும் விளங்கி குரு மாணவர்களின் பெருவிருப்பிற்குரிய வரானார். இதைவிட நாட்டின் பலவேறு இடங்களுக்கும் சென்று அவர் வழங்கிய கருத்துரைகள், விரிவுரைகள், மறையுரைகள், பயிற்சிகள் எண்ணற்றவை. கிழக்குப் பல்கலைக்கழகப் பகுதி நேர விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

பேச்சாற்றலுடன் எழுத்தார்வமும் மிக்கவர் நமது புதிய ஆயர். எமது மறைமாவட்ட வெளியீடுகளான தொண்டன், Internos மற்றும் வெட்டாப்பு ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். கவர்ச்சியான இனிமையான மொழிநடையில் எழுதக் கூடியவரான ஆயரவர்கள் தொண்டன் சஞ்சிகையில் எழுதிய பல கட்டுரைகள் வாசகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றவை. உரோமையில் உயர்கல்வியை முடித்து நாடுதிரும்பிய பின் தொண்டனில் தொடராக வெளிவந்த 'புனித நாட்டுப் பயணம்' எனும் தொடர் கட்டுரை வாசகர்களின் வரவேற்பைப் பெற்றதோடு பின்பு நூலாகவும் வெளிவந்தது. தற்போதும் தொண்டன் சஞ்சிகையில் 'இன்றைய உலகின் திருச்சபை' எனும் கட்டுரையைத் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கும் ஆயர் அவர்கள் பல நூல்களைத் தந்த படைப்பாளி.

30ம் பக்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்கக் குரு அரச மும்மொழி பெயர்ப்பாளர்

திருமதி. ஆஞ்சலின் சுப்பிரமணியம்



2012 ஆடி மாதம் 31ம் திகதி திருகோணமலை மாவட்ட நீதிபதி **கௌரவ திரு T.J. பிரபாகரன்** முன்நிலையில் பேராலயப் பங்குதந்தை **அருட்பணி ஜோர்ஜ் திசாநாயக்க** அவர்கள் அரச மும்மொழி (தமிழ், சிங்களம், ஆங்கிலம்) பெயர்ப்பாளராக உறுதிமொழி செய்து கொண்டார். நீதி அமைச்சினால் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தி அடைந்த அவருக்கு நீதி அமைச்சு நியமனம் வழங்கியுள்ளது. இவர் இலங்கையில் முதலாவது அரச மும்மொழி பெயர்ப்பாளராக நியமனம் பெற்றுள்ளார். இவர் ஒரு கத்தோலிக்கக் குருவானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

21ம் பக்க தொடர் ...



இவ்வாறு உயர் கல்விப் புலமையும் எழுத்தாற்றலும் பணியார்வமும் தாம் ஏற்றுக்கொண்ட கருத்தில் உறுதியும் அஞ்சாமையும் மிக்க ஆயரவர்கள் 2006ம் ஆண்டு பெப்ரவரி திங்கள் 19ம் நாள் மறைமாவட்டக் குருமுதல்வராக உயர்த்தப்பட்டார். இவ்வாறு தமது வாழ்வில் இறையருளாலும், அறிவாற்றலாலும், விடாமுயற்சியாலும், பணிச்சிறப்பாலும் பல நிலைகளில் உயர்ச்சி கண்டு வளர்ந்து துணையாயராகி தற்போது மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் ஆயராக விளங்குகின்ற பேரருள் தந்தை யோசப் பொன்னையா ஆண்டகையவர்களை இறைவன் தமது அருளாசீரால் நிறைத்திட வேண்டுவோம். புதிய ஆயரது தலைமை யில் புதிய மறைமாவட்டம் புதிய வரலாற்றை எழுதிச் செல்லட்டும். ஆயரது பணியால் ஆன்மீகத்தின் நறுமணம் எங்கும் பரவட்டும்.



## வாக்களித்தபடி பல நாடுகள் சமயச் சுதந்திரத்தை மதிப்பதில்லை - பேராயர் தொமாசி

ஐ.நா. மனித உரிமைகள் அவையின் 20வது அமர்வில் சமயச் சுதந்திரம் குறித்து உரையாற்றிய, ஜெனீவாவிலுள்ள ஐ.நா. அலுவலகங்களுக்கான வத்திக்கானின் நிரந்தரப் பார்வையாளர் பேராயர் சில்வானோ தொமாசி, சமயச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், மனச்சான்றின் சுதந்திரம், அடிப்படை மனித உரிமைகள் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதாக ஒத்துக்கொண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பல நாடுகள் இதனைச் செய்வதில்லை என்பதைச் சுட்டிக்காட்டினார். உண்மையான சமயச் சுதந்திரம், வெறுமனே வழிபாட்டுச் சுதந்திரம் மட்டுமல்ல மாறாக, போதித்தல், கற்பித்தல், புதிய உறுப்பினர்களை ஏற்றல், அரசியலில் பங்கேற்பு, பொதுவான நடவடிக்கைகளில் கலந்து கொள்ளல் ஆகியவையும் சமயச் சுதந்திரத்தில் அடங்கும் என்று பேராயர் தொமாசி கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





*119 வருட வரலாற்றைக் கொண்ட திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டம் 2012ம் ஆண்டு ஜூலை மாதம் 3ம் திகதி தொடக்கம் இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. திருத்தந்தை 16ம் ஆசிர்வாதப்பர் இப்பிரகடனத்தை வெளிப்படுத்தியிருந்தார். புதிய மறைமாவட்டத்தின் முதல் ஆயராக மேன்மைமிகு* **கலாநிதி யோசப் பொன்னையா ஆண்டகை அவர்கள்** *திருத்தந்தையால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். எனவே, இம்முறை தொண்டனின் சில நிமிடங்களுக்காக எமது புதிய ஆயர் அவர்களைச் சந்திக்கின்றோம்.*

*ஆயர் அவர்கள் தம்மைச் சந்திப்பதற்காக நேரமொன்றை ஒதுக்கித்தந்திருந்தார். அவர் குறிப்பிட்ட நேரத்திற்கு நாம் சமூகமளித்திருந்தோம். ஆயர் அவர்கள் நேரம் தவறாமையைப் பின்பற்றுபவர். அவரைச் சந்திக்கச் சென்றபோது புன்முறுவலுடன் எம்மை வரவேற்றார். எப்பொழுதும் போலவே அவரது முகத்தில் அன்பும், கருணையும், வசீகரமும் நிறைந்து காணப்பட்டன. ஆனால், அவற்றுக்குப் பின்னால் உரிமையுடன் கூடிய கண்டிப்பும் உள்ளதை அவருடைய உரையாடல்கள் மூலம் தெரிந்துகொண்டோம்.*

**மட்டக்களப்பு என்னும் புதிய மறைமாவட்டத்தின் தோற்றம் பற்றியும் அதன் எல்லைகள் பற்றியும், புதிய மறைமாவட்டம் உண்டானதால் ஏற்படும் அநுகூலங்கள், பிரதிகூலங்கள் பற்றியும் ஆயரிடம் வினவினோம்.**

சற்று நிதானமாக யோசித்து தனது பதிலைச் சொன்னார். அவர் ஆழ்ந்து சிந்திக்கும்போது அழகிய சுருக்கங்கள் அவர் நெற்றியில் தோன்றின.

1893ம் ஆண்டு திருகோணமலை மறை மாவட்டம் உண்டானது. திருகோணமலை துறை முகப்பட்டினமாகக் காணப்பட்டதாலும் கிழக்கின் தலைநகர் போல் விளங்கியதாலும் மறைமாவட்டத்தின் பெயர் திருகோணமலை மறைமாவட்டம் என வழங்கப்பட்டது. பிரான்சு நாட்டைச் சேர்ந்த அதி. வந்தனைக்குரிய சாள்ஸ் லவிஞ்ஞே என்னும் இயேசுசபைத் துறவி திருகோணமலை மறை மாவட்டத்தின் முதல் ஆயராக நியமிக்கப்பட்டார். பின்னர் இயேசு சபையைச் சேர்ந்த அதி.வந்தனைக்குரிய கஸ்டன் றொபிஸே,



அதி.வந்தனைக்குரிய இக்னேசியஸ் கிளனி ஆகிய ஆண்டகைகள் ஆயர்களாக அரும் பணியாற்றினார்கள். கிளனி ஆண்டகையின் காலத்தில் துணையாயராக அதி.வந்தனைக்குரிய தியோகுப்பிள்ளை ஆண்ட கையவர்களும் சில ஆண்டுகள் பணியாற்றினார். இதற்கிடையில் மட்டக்களப்பு நிர்வாக மாவட்டத்தில் கத்தோலிக்க விசுவாசம் வீச்சாகப் பரவ ஆரம்பித்தது. இதனால் 1969ம் ஆண்டில் திருகோணமலை மறைமாவட்ட மானது திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்டம் எனப் பெயர் கொண்டது. இதற்குத் திருத்தந்தை தனது மேலான அனுமதியை வழங்கி யிருந்தார். பின்னர் அதி.வந்தனைக்குரிய எல்.ஆர். அன்ரனி ஆண்டகையவர்கள் ஆயராக இருந்த போது இம்மறைமாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டுமென்று திருத்தந்தையிடம் விண்ணப்பம் செய்தார். அது 1980களில் இடம்பெற்றது. அதே வேளை வடக்கிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியதாக கிளி - முல்லை மறைமாவட்டம் என்ற ஒன்றை உருவாக்கும் முயற்சியும் உண்டாகியிருந்தது. யுத்தம் காரணமாக அது இன்னமும் கைகூட வில்லை. சுமார் முப்பது வருட காலத்தின் பின் அருட்கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களின் காலத்தில் திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட மானது திருகோணமலை மறைமாவட்டம், மட்டக்களப்பு மறைமாவட்டம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

பதுளை வீதியில் புல்லுமலை வரைக்கும், கொழும்பு வீதியில் புனாணை வரைக்கும், மூதூர் வீதியில் வெருகல் வரைக்கும், கல்முனைக் கப்பால் பொத்துவில் - இக்கினியாகல ஹிங்குரான வரைக்கும் மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் எல்லைகள் வியாபித்துக் காணப்படுகின்றன. வளம் மிக்க பிரதேசமாகவும், பல்லின, பல்மொழி பேசும் மக்களைக் கொண்ட விசாலமான பகுதி யாகவும் உள்ளது.

மறைமாவட்டங்கள் பிரிக்கப்படும்போது அங்கு பிரிவுகள், பிளவுகள் என்று அர்த்தப்படலா காது. பிரிவு என்பது ஒரு வளர்ச்சிப் போக்கையே காட்டுகிறது. இதனால் மட்டக்களப்பு மறைமாநிலமும் வளர்ச் சியடையும்... திருமலை மறைமாநில மும் வளர்ச்சியடையும். வளங்கள் மேலும் மேலும் பங்கிடப்படும், பகிரப்படும்... நற்செய்தி விரைவாகவும், இலகுவாகவும் பரப்பப்படும்... பணி விரிவாக்க மடையும்... விசுவாசப்பரப்புதல் வளரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதிய மறைமாவட்டத்தின் முதல் ஆயர் என்ற வகையில் உங்கள் முன் காணப்படும் சவால்கள், அதற்காக நீங்கள் மேற்கொள்ளவுள்ள வேலைத் திட்டங்கள் என்பன பற்றி எம்முடன் பகிர்ந்து கொள்ளமுடியுமா என்று அவரிடம் கேட்டோம்.**

நிதானமாக ஒவ்வொரு வார்த்தைகளாகப் பதிலளித்தார். நாம் வாழும் பிரதேசம் பல்லின, பல்சமூக, பல்மொழி பேசும் சமூகம் கொண்ட நிலப்பரப்பாகும். எனவே, நாம் ஒவ்வொரு அடியையும் கவனமாகத்தான் எடுத்துவைக்க வேண்டும். நாம் சமூகத்தை விட்டுப்பிரிந்து வாழ இயலாது. நாம் சமூகங்களின் ஒற்றுமைக்கான தூண்களாய், பாலங்களாய் இருக்கவேண்டும். அதற்கு எமது விசுவாசம், இறைஇயேசுவில் கொண்டுள்ள பக்தி துணைநிற்கும்.

பங்குத் தளங்களில் வளப்பற்றாக்குறைகள் காணப்படுகின்றன. எனவே, பங்கு மக்களே பங்குகளைப் பராமரிக்கும் நிலை மேலோங்க வேண்டும். "சுயநிறைவுள்ள பங்குகளாக" எமது பங்குகள் மாற வேண்டும். இதனால் காலப் போக்கில் எமது மறைமாவட்டமும் சுய நிறைவான மறைமாவட்டமாக மாறும் வாய்ப்புப் பெறும்.

குருக்களுக்குப் பெருந்தட்டுப்பாடு காணப்படுகின்றது. சுமார் நான்கு வருடங்களின் பின் அடுத்தவருடந்தான் சுமார் ஆறு அருட்சகோதரர்கள் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படும் வாய்ப்புள்ளது. தேவையோ அதிகம்... அறுவடையோ குறைவு.

"வத்திக்கான் சங்கம்", கத்தோலிக்கத் திருச்சபைக்கு ஒரு புத்துணர்வைத் தந்தது. அதன் ஐம்பதாவது ஆண்டு நிறைவையொட்டி "நம்பிக்கையின் ஆண்டாக" அடுத்த வருடம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் "கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி ஏடு" தனது இருபது ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடுகின்றது. இவை புதிய நற்செய்தி அறிவிப்பு அதாவது, மீள் நற்செய்தி அறிவிப்பை வலியுறுத்துகின்றன.

இவற்றையெல்லாம் நாம் பயன்படுத்த வேண்டும். அதற்காக ஐந்தாண்டுத் திட்டங்களை உண்டாக்க வேண்டும். பொதுநிலையினரின் பங்களிப்பை, பங்குத் திருச்சபையில் அதிகரிக்கப் பண்ணும் செயற்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். மறைமாவட்ட மேய்ப்புப் பணிச் சபையை இதற்காகப் பயன்படுத்த வேண்டும்.

படுவான்கரை மற்றும் அது போன்ற பிரதேசங்களில் விசுவாச வளர்ச்சியை மேம்படுத்த வேண்டும். குருக்கள், துறவிகளின் பிரசன்னம் அப்பகுதிகளில் அதிகரிக்கப்பட வேண்டும். தற்போது வாரத்தில் ஒரு நாள் திருப்பலிப் பூசைக்காக மட்டும் குருக்கள் அப்பகுதிக்குச் செல்லும் மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புக்களேயுள்ளன. அந்நிலை மாற வேண்டும், குருக்களும் அதிகம் தேவைப்படுகின்றமை சவாலாகும்.

இன்னுமின்னும் நிறையச் செய்யவேண்டியுள்ளது. அதற்காக விசுவாசிகளின் ஒத்துழைப்பிற்காகவும், இறையாசீருக்காகவும் நாம் அதிகமாகச் செபிக்க வேண்டும்.

**புதிய மறைமாவட்டத்தின் முதல் ஆயர் என்று உங்கள் பெயர் அறிவிக்கப்பட்டவுடன் ஏற்பட்ட உங்கள் மனவுணர்வுகள் பற்றி வாசகர்களுடன் பகிர முடியுமா?" என்று கேட்டோம்.**

மெல்லிய புன்னகையுடன் பதில் சொன்னார். "இது ஆண்டவரின் தெரிவு. என்னைப் படிப்படியாக ஆயத்தப்படுத்தியுள்ளார் என்பது புலனாகின்றது. எனது குருத்துவத்தின் பின் பல்கலைக் கழகத்தில் வணிகப்பிரிவில் அனுமதி கிடைத்தது. அத்துடன் "மகாபொல" புலமைப் பரிசிலும் தயாராகவிருந்தது என்றாலும் பல்கலைக்கழகம் செல்ல இயலாமற்போயிற்று. அவ்வாறே பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர் பதவிக்கான நேர்முகப்பரீட்சைக்குச் சென்றேன், அதுவும் கிடைக்கவில்லை. சில வேளைகளில் அவ்வாய்ப்புக் கிடைத்திருந்தால் எனக்கு இவ்வாசீர்வாதம் கிடைக்காமற்போயிருக்கலாம். "இறைவன் ஒரு வாயிலை மூடினால் பத்து வாயில்களைத் திறப்பார்" என்பார்கள். அதுமட்டுமல்லாமல் தேசிய குருமடத்தின் விரிவுரையாளர், மறைமாவட்ட குருமுதல்வர் போன்ற பணிகளினூடாக என்னை இறைவன் ஆயத்தப்படுத்தியுள்ளார் என விசுவசிக்கின்றேன். இதற்கு மேலாக, இறைமக்கள் எனக்காகச் செய்த செபங்களுக்கு இறைவன் செவி சாய்த்துள்ளார். இவ்வாறு அவர் சொல்லும்போது அவரின் அடக்கம் வெளிப்பட்டது.

**தற்போதைய தலைமுறைப் பொதுநிலையினரின் விசுவாசம் பற்றி அவரிடம் கேட்டோம்.**

சில தடைகள் சாத்தான்கள்போல் காணப்பட்டாலும் இத்தலைமுறையும் விசுவாசத்தில் தளர்ந்தவர்களாகத் தெரியவில்லை. ஆர்வமுள்ள இளம் பொதுநிலையினர் ஏராளமாக உள்ளனர். அவர்களை நாம் உள்வாங்க வேண்டும்... அவர்களுக்கும் பொறுப்புகள் கொடுக்கப்பட வேண்டும்.

குறிப்பாக அருங்கொடை இயக்கங்கள் வளர்க்கப்பட வேண்டும்... விசுவாசம் மங்காமல் இருக்க அவ்வாறான அமைப்புகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

தொடர் 24ம் பக். ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



06

# நான் நம்புவது

மறைக்கல்வி ஆண்டு

**"பரலோகத்திற்கு எழுந்தருளி எல்லாம் வல்ல பிதாவாகிய சர்வேசுரனுடைய வலப்பக்கத்தில் வீற்றிருக்கின்றார். அவ்விடத்தில் இருந்து சீவியரையும் மரித்தோரையும் நடுத்தீர்க்க வருவார்".**

இயேசுவின் தெய்வீகத் தன்மைக்கு விண்ணேற்பு ஒரு முக்கியமான சான்று. விவிலியத்தில் இயேசுவின் விண்ணேற்புப் பற்றி மாத்திரமல்ல வேறு சில மனிதர்களின் விண் ணேற்புப் பற்றியும் கூறப்பட் டுள்ளது. இயேசுவின் விண்ணேற் புக்கும், மற்றவர்களின் விண்ணேற் புக்கும் இடையே வேறுபாடுகள் உண்டு. மனிதர்களுடைய புனித மான வாழ்வை முன்னிட்டு, உடலோடு அவர்கள் கடவுளால் எடுத்துக் கொள்ளப்பட்டனர். (ஏனோக்கு தொ.நூல் 5:24, எலியா 2, அரச 2:22) ஆனால், இயேசுவைப் பொறுத்தளவில் விண்ணகத்தில் இருந்து இறங்கி வந்த அவர் (யோவான் 6:35) மீண்டும் தன்னுடைய இடத்திற்கு ஏறிச் செல்வதே அவரின் விண்ணேற்பு.

அதுசரி, விண்ணேற்பு என்பதனை இன்னும் சற்றுத் தெளிவாகப் புரிந்துகொள்ள முயற்சி செய்வோம். மனிதனாகப் பிறந்ததன் மூலம் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழ்ந்து வந்த மக்களுக்கு மட்டுமே தன்னுடைய பிரசன்னத்தை வெளிப்படுத்திய இயேசு, விண்ணேற்பு மூலம் உலகம் முழுவதும் தன்னுடைய பிரசன்னத்தை வெளிப்படுத்து கின்றார். எங்கும் எல்லாவற்றையும் நிரப்புகின்ற (எபே 1:23) அவரது பிரசன்னம் உலகம் அனைத் திற்கும் வாழ்வுதர வல்லதாகவும் இருக்கின்றது. உதாரணமாக, உப்பு சாதாரணமாக இருக்கும்போது கண்ணுக் குத் தெரியக்கூடியதாக இருக்கின்றது. ஆனால், அந்த உப்பை ஒரு தொட்டி நீரில் கரைக்கும்போது அதைப் பார்க்க முடியாது. இருப்பினும், நீர் முழுவதிலும் உப்பு நீக்கமற நிறைந்திருக்கிறது. அதே போல கண்ணுக்குத் தெரிபவராக, மனிதராக வாழ்ந்த இயேசு, விண்ணேற் புக்குப் பின் கண்ணுக்குத் தெரியாத வராக, அதேநேரம் உலகம் முழுவதும் நிறைந்தவராக இருக்கின்றார். விண் ணேற்றத்தின் மூலம் கிறிஸ்து தன்னு டைய பிரசன்னத்தால் உலகை நிரப்புவது மட்டுமல்லாமல், அனைத்தின் மீதும் அதிகாரம் கொண்டவராகவும் விளங்கு கின்றார். இயேசுவினுடைய விண்ணேற் பின் மகத்துவத்தையும் அதனால் நாம் பெற்றுக்கொள்ளும் பயனையும் விண் ணேற்பு ஞாயிறு திருப்பலியின் தொடக்க உரை தெளிவுப்படுத்துகின்றது. "கடவு ளையும் மனிதரையும் இணைப்பவரும், உலகிற்குத் தீர்ப்பிடுகிறவரும், வல்லமை மிக்க வானணிகளின் ஆண்டவரும் அவரே. இவ்வாறு அவர் சென்றது, எங்கள் தாழ்நிலையை விட்டு அகல வேண்டும் என்பதற்காகவல்ல மாறாக, எங்கள் தலைவரும் முதல்வருமாகிய அவர் முன்னரே சென்ற அவ்விடத்திற்கு அவர் உறுப்பினராகிய நாங்களும் அவரைப் பின் தொடர்ந்து செல்வோம் என்று நம்பிக்கை கொள்வதற்காகவே.

இவ்விசுவாச சத்தியத்தின் இரண்டாம் பகுதி நமக்கு இன்னுமொரு உண்மையை கற்றுத் தருகின்றது. விண்ணில் இருந்து மனிதராக மண்ணுலகிற்கு வந்த இயேசு, திரும்பி விண்ணேற்றமானார். இந்த இயேசு மீண்டும் மகிமையின் மன்னராக, மக்களைத் தீர்வையிடுபவராக வருவார். அவர் எப்பொழுது வருவார் என்பது தந்தை ஒருவருக்கே தெரியும். இறுதி நாளில் இயேசுவின் தீர்வை எப்படிப் பட்டதாக இருக்கும்? இயேசுவின் தீர்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி, உண்மை, அருள் வாழ்வு, அன்பு போன்ற இறையாட்சியின் விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டதாக அமையும். இயேசு ஆரம்பித்த இறையாட்சி மேற்கூறிய பண்புகளைக் கொண்டதாக இருக்கும். அதற்கு எதிரானவை தங்கள் தீர்ப்பைப் பெற்றுக் கொள்ளும். இறையாட்சியின் விழுமியங்களுக்கு எதிரான எந்தவொரு வாழ்க்கை முறையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. இறையாட்சிக்கு மாற்றீடாக வேறு எந்த ஆட்சியும் இடம் பெறமுடியாது.

மேலும், தூய யோவானின் நற்செய்தியைப் பார்க்குமிடத்தில் இறுதிநாள் தீர்வை, ஒவ்வொரு நாளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிகழ்வாகக் காணலாம். நாம் இறைவனின் அருளுக்குச் செவி கொடுக்கின்றோமா அல்லது புறக்கணிக்கின்றோமா? "அவர் தமக்குரிய வர்களிடம் வந்தார், அவர்க்கு உரியவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" (யோவான் 1:11) "ஒளி உலகிற்கு வந்திருந்தும், தம்செயல்கள் தீயனவாய் இருந்ததால், மனிதர் ஒளியைவிட இருளையே விரும்பினர். இதில்தான் அவர்களுக்கெதிரான தண்டனைத் தீர்ப்பு அடங்கியுள்ளது" (யோவான் 3:19) இயேசு பிலாத்து முன் நின்றபொழுது, இயேசுவுக்குத் தீர்ப்பு வழங்கப்படவில்லை மாறாக, உலகம் தீர்ப்புப் பெற்றுவிட்டது. தூய பேதுருவின் மொழியில் "வாழ்வுக்கு ஊற்றானவரைக் கொன்று அழித்து விட்டீர்கள்"

இன்று இறையருளுக்கு நான் செவிகொடுக்காத பொழுது எனக்கு நானே தீர்ப்பு எழுதுகிறேன். இதனை யோவான் நற்செய்தி பின்வருமாறு கூறுகின்றது; "உலகிற்குத் தண்டனைத் தீர்ப்பு அளிக்க அல்ல, தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார்" (1:17-18) கத்தோலிக்க மறை ஏடு இப்படிக் கூறுகின்றது, "இவ்வுலக வாழ்வில் இறையருளை மறுத்தவர்கள், தங்களுக்குத் தாங்களே தீர்ப்பிட்டுக் கொள்கின்றார்கள். தங்களின் செயல்களுக்கேற்ப, ஆவியாரின் இறை அன்பையே மறுத்து நித்தியத் தண்டனைக்குத் தங்களையே உட்படுத்தி கொள்வர் (678-679).

■

*22ம் பக். தொடர் .....*

பிரிவினைச் சபைகள் ஏற்படுத்தும் சவால்களைப் பற்றி ஆயரவர்கள் குறிப்பிடுகையில், "Main line churches" கிறிஸ்தவ ஒன்றிப்பின் மூலம் எம்முடன் புரிந்துணர்வுடன் செயற்படுகின்றன. கிழக்கு மாகாணப் பிரதேசங்களில் மட்டும் சுமார் ஆயிரம் பிரிவினைச் சபைகள் காணப்படுகின்றன. அவர்கள் மாதா மற்றும் சிலை வழிபாடுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டுதான் பிரிவினையைத் தூண்டுகின்றார்கள். அத்துடன் முன்மாதிரிகையாகச் செயற்பட வேண்டிய நம்மவர்கள் சிலரின் துன்மாதிரிகையும் விசுவாசிகள் பிரிந்து செல்லக் காரணமாயுள்ளன. எனவே, பொதுநிலையினருக்கும் பயிற்சி, விவிலிய அறிவு என்பன ஊட்டப்பட வேண்டும் என்றார்.

**மறைமாவட்ட ஆயர் என்ற வகையில் மாணவர்களின் கல்வி வளர்ச்சி, வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் பொருளாதார மீட்சி என்பன தொடர்பாக உங்களால் ஆற்றப்படக்கூடிய பணிகள் என்னவாகும்? என்று ஒரு வினாவைத் தொடுத்தோம்.**

இவ்வினாவுக்குப் பதில் சொல்ல அவர் சற்று நேரம் எடுத்தார்.

கல்விப்பணியைப் பொறுத்தவரையில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக குருக்களை, துறவிகளை கல்விப்பணியில் அதிகளவில் ஈடுபடுத்தவேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு. அவர்களின் முதன்மைப் பணியான பங்குத் தளப்பணிகட்கு மேலதிகமாக அவர்கள் இதனைச் செய்யலாம்.

வசதி குறைவான பிள்ளைகட்காக சுமார் 15 இல்லங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் எழுச்சிக்காக நாம் பெரிதாகச் சாதிக்கக்கூடியது எதுவுமில்லை. நாம் அரசாங்கம் போன்ற அமைப்பு இல்லை என்றாலும் எமது சக்திக்கு உட்பட்ட வகையில் "எகெட்" போன்ற அமைப்புகள் மூலம் அம்மக்களுக்காகச் சேவை செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

*இறுதியாக, தொண்டன் வாசகர்கள் சார்பில் நன்றி கூறி விடை பெற்றோம். ஆயர் அவர்களும் எமக்கு நன்றி கூறியபடி இறுதியாக ஒன்றைச் சொன்னார்.*

"எமது தீர்மானங்கள் எதுவும் தனி மனிதத் தீர்மானமாக இருக்காது. எல்லோரிடமும் கலந்து ஆலோசித்து எடுக்கும் முடிவாகவே இருக்கும்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் கிறிஸ்தவ இலக்கியங்கள்

## கித்தேரியம்மாள் அம்மானை

(மே மாதத் தொடர்)




பத்தாவது காதையில் கிறிஸ்தவ விசுவாசத்தில் உறுதிபெறக் கித்தேரியைத் துணை செய்யுமாறு அவர் வேண்டுகின்றார்.

வேத நலம் வேண்டி நெடும்வேதனையாய் முச்சிறையள்
ஏதம் சில நின்று தலைஈர்த்து வீழ்ந்தனைநீ
அம்மறையை நாம் உளத்தில் அஞ்சிலராய் விட்டொழியா
மெய்மறையை அம் உளத்தில் வேரூன்றச் செய்வாயே
(எண்மர் காதை: 142 – 143)

வான்விரும்பித் தாய் தாதை மற்றினமும் பாராமல்
கான்விரும்பி நற்றவத்தைக் காத்து மலை அண்டினை நீ
இனம்வேண்டி ஆண்டவரை ஈங்கிழவா தோர்நிலையாய்த்
தினம் வேண்டிக் கொண்டிருக்கத் திண்ணுறுதி தந்தருள்வாய்
(எண்மர் காதை: 148 – 149)

இவ்வம்மானையின் இறுதிக் காதையாக அமையும் புதுமைக் காதை இறப்பின் பின் கித்தேரி செய்த அற்புதங்களைக் கூறுவதாக அமைந்துள்ளது. தன்னை நாடி வந்தோர்க்கு இறையருளால் துணை புரிபவளாக அவள் காணப்படுகிறாள் என்பதை இக்காதையின் மூலம் புலவர் வலியுறுத்தியுள்ளார். அவற்றிற் சில புதுமைகள் வருமாறு:

காது நோய், கண் நோய் குணமாதல், இடியினால் கண் பார்வையை இழந்த பெண் மீண்டும் பார்வை பெறுதல், ஊமை பேசுதல், முடவன் நடத்தல், இறந்த குழந்தை உயிர் பெறுதல் முதலானவை.

கித்தேரி கி.பி இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவளாகக் குறிப்பிடப்பட்டாலும் அவளது பிறப்பு மற்றும் இறப்பு பற்றிய சரியான ஆண்டு குறித்துச் சில கருத்து மாறுபாடுகள் நிலவுகின்றன. வீரமாமுனிவர் இவ்வம்மானையில் இவ்விரண்டும் இடம்பெற்ற ஆண்டுகளைக் குறிப்பிட்டுள்ளார்.

பிறப்பு போற்றி யுலகன்றுவப்ப பூமேல் பிரான்பிறந்த
நூற்றிருபத்தாண்டில்அன்ன நுண்ணிடையார் தோன்றினரால்
(பிறப்பு: 72)

என்பது கித்தேரியின் பிறப்புப் பற்றிய செய்தியைக் குறிப்பிடுவதாகும். அதாவது, கி.பி 120ம் ஆண்டில் அவள் பிறந்ததாக வீரமாமுனிவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல,

பரிபாலன் என்பான் பவம்அற நூற்றையாறாம்
வருடம் என வைகாசி வந்தெழுமூன்று ஓர்பகலாய்
(கொய்சிரம்: 57)

என்பதில் 130ம் வருடம் வைகாசி மாதம் இருபத் தோராம் திகதி அவளது இறப்பு நிகழ்ந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

**நூற்றையாறு என்பது 100 + (5x6) =130 என வரும். எழு மூன்று என்பது 7x3=21 என வரும்.**

எனவே, கித்தேரி இறக்கும்போது அவளது வயது பத்து ஆகும். இதனை 'பேதை வயது ஐயிரண்டாய்' (கொய்சிரம் : 60) என்பதிலும் வலியுறுத்தியுள்ளார் வீரமாமுனிவர்.

கித்தேரி அரச குடும்பத்தில் பிறந்தவள். ஆரம்பத்தில் தாய்தந்தையரால் புறக்கணிக்கப்பட்டவள். கிறிஸ்தவ

○ றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
முதுநிலை விரிவுரையாளர்,
மொழித்துறை - கிழக்குப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர், சிறுமியர் பாலியல் துஷ்பிரயோகம்

- அருள்மணி -



*சிறுவர், சிறுமியர் பாலியல்*
*துஷ்பிரயோகத்தைத்*
*தடுத்து நிறுத்த வேண்டியது யார்*
*குற்றவாளிகளைக் கண்டுபிடித்து*
*தண்டணைக்குள்ளாக்க வேண்டியது யார்*
*நிச்சயமாக, இது காவல்துறையின்*
*தலையாய கடமை*
*என்பதை யாவரும் அறிவர், ஆனாலும்*
*சமுக நலன் விரும்பிகள் இதைத் தடுக்க*
*முன்வர வேண்டும் என்று அண்மைய*
*காவல்துறை அறிக்கை கூறுகிறது*
*சமுக நலன் விரும்பிகள் எப்படி*
*இதைத் தடுப்பார்கள் சிந்திக்க வேண்டும்*
*காவல்துறையே இதைத் தடுக்க வேண்டும்*
*குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத்*
*தண்டணைக்குள்ளாக்க வேண்டும்*
*அதன் மூலம் இதை இல்லாமல்*
*செய்யவேண்டும்*
*இது காவல்துறையின் தலையாய கடமை*
*இதைத் தட்டிக்கழிப்பது தவறு*
*பிறர்மேல் இந்தப் பொறுப்பைச் சுமத்தாமல்*
*காவல்துறையே முன்வந்து, இதைச்*
*செய்யவேண்டும்*
*சி.ஐ.டி. வேலை செய்து, துப்பறிந்து*
*குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவேண்டும்*
*அவர்களுக்குத் தகுந்த தண்டனை வழங்க*
*ஆவன செய்து, அயோக்கியர்கள் மத்தியில்*
*அச்சத்தை ஏற்படுத்தி இதை நிறுத்த*
*வேண்டும்.*

---

மதத்தைப் போதித்தமைக்காகத் தனது தந்தையால் சிறையிலடைக்கப்பட்டவள். அவள் தன் பிள்ளை என்பதை உணர்ந்த மன்னன் அரச சுகபோகங்களைக் காட்டி மறையைத் துறந்துவிடுமாறு கோரியபோது இவ்வுலக சுகபோகங்களுக்காகத் தன் கொள்கையிலிருந்து மாறாவதள். தந்தையையும் தாயையும் அரச வாழ்வையும் துறக்கத் துணிந்தவள். இறுதியாகத் தன் உயிரையும் துறக்கச் சித்தமானவள். இவளது உறுதியும் விசுவாசமும் மேலானவை. துறவற வாழ்வில் பெற்றோருக்காகவும் சுகபோக வாழ்விற்காகவும் வாழாத தூய இறைபக்தி அவளிடம் இருந்தது. 'கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப் பாராத', 'இவ்வுலகத்துப் பாசத் தளைகளுக்குள் கட்டுப்படாத தூய இறைபக்தி' அவளிடமிருந்தது.

'தாய்தாதை என்னால் தவிர்ந்தனைநீ என்மகளே
தாய்தாதை ஆயினன்நான் தானுனக்கே'
(கொய்சிரத்தெழுச்சி காதை: 12)

என இறைவன் அவளைப் போற்றும் சிறப்பினைப் பெற்றவள். விசுவாசத்தில் தளர்வுற்ற மக்களுக்குப் பத்து வயதில் உறுதியும் மனத் திண்மையும் உடையவளாய் வாழ்ந்த கித்தேரியின் வரலாற்றை வலியுறுத்திக் கூறி அம்மக்களை விசுவாசத்தில் உறுதி பெறச் செய்ய வேண்டிய தேவையை வீரமாமுனிவர் நன்குணர்ந்திருந்தார். அவர் இவ்வம்மானையில் கித்தேரியை தன்னிகரில்லாத் தலைவியாக - காப்பிய இலக்கணங்களுக்கு அப்பாலான தன்னிகரில்லாத் தலைவியாகப் படைத்துள்ளார்.

சீத்தலைச் சாத்தனார் மணிமேகலைக் காப்பியத்தில் பௌத்த அறங்களை மிகுதியாகக் கூறினாலும் மணிமேலை அக்காப்பியத்தின் நாயகியாக விளங்கியதைப் போலன்றி கித்தேரியின் கதையோட்டத்தினூடாகவே மிக அளவாகவும் அழகாகவும் கிறிஸ்தவக் கருத்துகளை வாசகர்களுக்குச் சலிப்பினை ஊட்டாத வகையில் கூறியுள்ளார் புலவர்.

தேம்பாவணியைக் காப்பியமாகப் படைத்த வீரமாமுனிவர் யாவர்க்கும் விளங்கக்கூடிய வகையில் எளிமையாக இவ்வம்மானையைப் படைத்துள்ளார். இவ்வம்மானை தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்கு மட்டுமன்றி கிறிஸ்தவர்களுக்கும் அருங்கருவூலமாகத் தமிழ் உலகில் சிறப்புப் பெறுகின்றது.



தொடரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய மறைமாவட்டமும் அது எதிர்நோக்கக்கூடிய சவால்களும்....

## ஓர் ஆய்வுக் கண்ணோட்டம்

ஆனந்தா ஏஜீ. இராஜேந்திரம்



நீண்ட காலமாக திருகோணமலைக் கத்தோலிக்க மக்களாலும், மட்டக்களப்புக் கத்தோலிக்க மக்களாலும் முன்வைக்கப் பட்டுக்கொண்டிருந்த வேண்டுகோள் இன்று மேதகுஆயர் வந். யோசப் கிங்ஸிலி சுவாம் பிள்ளை ஆண்டகையின் அருமுயற்சினால் நனவாகி இருக்கின்றது.

திருகோணமலை மறைமாவட்டமாக உருவாகி, சனப்பரம்பல், செயற்பாட்டு அடிப் படையில் திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டமாக உருமாறித் தற்போது திருகோணமலை மறைமாவட்டம் என்றும், மட்டக்களப்பு மறைமாவட்டம் என்றும் உருப்பெற்றுள்ளது.

எனவே, திருகோணமலை மறை மாவட்டம் உருவாகி இருந்தமையால் அதன் தொடர்ந்த செயற்பாட்டுக்குப் பங்கமிருக்க இடமில்லை. ஓடுகின்ற இரயில் தன் பெட்டிகளில் சிலவற்றைக் கழற்றிவிட்டுத் தொடர்ந்து சென்றுகொண்டிருப்பது போன்றது.

ஆனால், மட்டக்களப்பு மறைமாவட்டம் என்பது புதியது! ஆகவே, அது தனது செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சில பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டி வரக்கூடும்.

ஆன்மீக, சமூக, பொருளாதார, அரசியல் அடிப்படையில் சவால்கள் தோன்ற நிறையவே வாய்ப்புகள் இருக்கின்றன.

ஆன்மீக வழிகாட்டுதலைப் பொறுத்த வரையிலும் மேதகுஆயர் யோசப் பொன்னையா ஆண்டகையவர்கள் கைதேர்ந்தவர் என்றே கூறவேண்டும். ஆனாலும், கதிரவெளி முதல் பொத்துவில் வரையிலும் ஆன்மீகத்தில் மக்களை வளப்படுத்தப் போதுமான ஆளணி வசதி — குருக்கள், கன்னியர் மற்றும் துறவிகள் என்று அவருக்கு உடன் பணிசெய்ய ஆட்கள் உண்டா? என்பது கேள்விக்குறி. மறைமாவட்டப் பிரிப்புடன் குருக்கள் பிரியவும் நிறையவே வாய்ப்புகள் உள்ளன. எனவே, பிரதானமாகக் குருக்களின் தேவை எழவே செய்யும். இருப்பினும், முன்னர் போன்று இயேசுசபைத் துறவியரின் பங்களிப்பு இருக்குமாகில் இச்சவாலை தைரியமாக எதிர் கொண்டிருக்க முடியும். அவர்களை முற்றிலுமாக நம்பி உருவாக்கப்பட்ட திருகோணமலை மறைமாவட்டம் ஏற்றம் கண்டது உண்மை. ஆனால், இன்றோ அவர்களது ஆள்பலம் ஆரோக்கியமானதல்ல. அதேசமயம் நம்மவர் நம்மில் ஒருவர் அறிந்தவர் தெரிந்தவர் என்ற அலட்சிய மனோபாவமும் இருக்கக்கூடாது. ஒரு தலைவனை புதிய சூழலில் பின்பற்றும் ஆர்வத்துடிப்பெல்லார் மனதிலும் உருவாக வேண்டும்; ஆம், அணுகுமுறை மாற்றம் வேண்டும், மேலதிகச் செயற்பாடு வேண்டும்.

கன்னியர் சபைகளைப் பொறுத்த வரையில் பிரான்சிஸ்கன் மிஷனரி சகோதரிகள், அப்போஸ்தலிக்க கார்மல் சகோதரிகள், திருக்குடும்ப, திருச்சிலுவைக் கன்னியர் மற்றும் ஏழை களின் சிறிய சகோதரிகள் ஆகியோரின் பலம் மாறாத நிலையில் அவர்களின் ஒத்துழைப்பில் குறைக்கப்பட்ட பரப்பெல்லைகொண்ட புதிய மறைமாவட்டம் இது விடயத்தில் தப்பிப் பிழைக்க முடியும்.

சமூகத் தேவைகளைப் பொறுத்த வரையிலும், ஏற்கனவே எகெட் - கரித்தாஸ் பலமாக அடித்தளம் கொண்ட அமைப்பாக இருப்பது புதிய மறை மாவட்டத்திற்கு ஒருநேர் புள்ளியாகும். இது தவிர ஏற்கனவே பொதுநிலையினர் மத்தியில் செயலாற்றும் தூயவின்சன்ட் டி போல் சபை, அன்பியம் ஆகிய வற்றின் செயற்பாடுகள் தக்கவகையில் ஆதரிக்



நூலகம்
கொழும்பு தமிழ்ச் சங்கம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டு ஊக்கப்படுத்தப்பட முடியுமானால் சமூகப்பணி தொடர்பாக எழக்கூடிய சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய வல்லமை மட்டக்களப்பு மறைமாவட்டத்திற்கு உண்டு. இவை மட்டுமல்ல, சர்வமத அமைப்பு மற்றும் கிறிஸ்தவ ஒற்றுமைப் பணிகளையும் கையோடு கொண்டுசெல்லவும் அவற்றின் இயக்கத்தில் தொய்வுவராமல் பார்ப்பதுவும் புதிய மறைமாவட்டத்தின் தேவையாக இருக்கும்.

அரசியல் துறையைப் பொறுத்தவரையில் மட்டக்களப்பு மறைமாவட்டம் பாராமுகமாக — அலட்சியமாக இருந்துவிட முடியாது. ஏற்கனவே இந்த வகையில் முக்கியமானதொருவ ராகக் கருதப்பட்டவர், மதிக்கப்பட்டவர் மேதகு சுவாம்பிள்ளை ஆண்டகை என்பதை மறுப்பதற்கில்லை. மட்டக்களப்புக்கு விஜயம் செய்யும் உள்நாட்டுப் பிரமுகர்களாயினும் சரி, வெளிநாட்டு முக்கியஸ்தர்களாயினுஞ்சரி, சருவதேச நிறுவனங்களின் பிரதிநிதிகளாயினும் சரி அவரைச் சந்திக்காமல் தமது பயணத்தை நிறைவுசெய்து கொள்வதில்லை. திருகோணமலையின் கேந்திர முக்கியத்துவம் அதை உறுதிப்படுத்தியது என்பதில் தவறில்லை. இருந்தும் மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளின் முக்கியத்துவத்தையும் குறைத்து மதிப்பீடு செய்வதற்கில்லை. இதனால் பல திறத்தாரும் புதியவரைத் தம் பக்கமிழுத்துக் கொள்ள முயலத்தான் செய்வார்கள்! இதுதவிர, சனப் பரம்பலை, இனப்பரம்பலைப் பயன்படுத்தி இடப்பரம்பலை உறுதிசெய்துகொள்ள முயலும் அரசியல் தலைமைத்துவங்களின் அச்சுறுத்தல் மன்னார் ஆயருக்கு மட்டுமே உரியதலையிடியாக இருந்து விடாது. இந்தப் பகுதிகளுக்கும் அது சொந்தமானது. இதனால் புதியவர் தன்னை ஒரு இராஜ தந்திரியாகவும் வடிவமைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. மென்மைப் போக்கு இந்த விடயத்தில் எப்போதைக்கும் சரிவராது என்பதை எவரும் ஏற்றுக்கொள்வர்!

பொருளாதார ரீதியில் புதிய மறைமாவட்டம் ஏற்கனவே இந்த நெருக்கடியை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் இது தீவிரமாகக் கூடிய வாய்ப்புகள் அதிகம். அள்ளிக் கொடுத்த சருவதேச சமூகம் இன்று கிள்ளிக் கொடுக்கின்ற நிலைக்கு வந்திருக்கின்றது. பாய்ந்துவரும் நீரூற்றுப் போலான நிதியளிப்பு இன்று நீர்க்குழாயினின்றும் சிறுகச் சிறுக ஒழுகுகின்ற நீர்போல் அருகி விட்டது. ஏற்கனவே நிதிச்சுமை! எனவே, அது குறித்துத் தீவிர கவனத்தை புதிய மறைமாவட்டம் செலுத்த வேண்டியே வரும். நம் ஆயரும் இது விடயத்தில் தன்னை வளர்த்துக்கொள்ள வேண்டியிருக்கும். இலவசங்களைப் பெறும் மனநிலையினின்றும் மாறி, மலிவுக்கு வாழுகின்ற மனப்போக்கினின் றும் மாறி தம் மறைமாவட்டத் திருச்சபை யைத் தாராளமாக ஆதரிக்கின்ற நிலைக்கு மக்களை மாற்ற வேண்டியது அவசியம். பெரும் பான்மை இன கத்தோலிக்கர்கள், அயல் நாட்டுக் கத்தோலிக்கர்கள், ஏன் அதிகமாக நம் மத்தியில் வாழுகின்ற ஏனைய மதத்து மக்கள் தம் ஆலயத் துக்கு, சமயத்திற்கு வழங்கும் பங்களிப்பை மட்டக்களப்புவாழ் கத்தோலிக்க மக்களால் தம் திருச்சபைக்கு வழங்கப் படுவதில்லை. வருமானத் தில் பத்திலொன்று என்பதெல்லாம் எப்போதோ எங்கேயோ கேட்ட ஞாபகமாக இருக்கின்ற நிலை. "அள்ளிக் கொடுப்பதில்தான் மக்கள் நிறைவு அடைய முடியும். இல்லை என்று சொல்லும்வரை இல்லாமை தான் நிறைந்திருக்கும்" என்பதை உணர்ந்து பங்களிப்புச் செய்யத் தன் மக்களை புதிய மறை மாவட்டம் உருவாக்க வேண்டும்.

அதேசமயம், புதிய மறைமாவட்டத்தின் சொத்துகள், வளங்கள் தெளிவாக இனங்காணப்பட வேண்டும். அவை சரியான முறையில் அபிவிருத்தி பண்ணப்படவும், முதலிடப்படவும் வேண்டும். குருக்களால் தனித்து இதை நிறைவேற்ற முடியாது. இத்துறையில் சம்பந்தப்பட்ட, ஈடுபாடுள்ள பொது நிலையினரையும் ஒன்று கூட்டி தீவிரமாக ஆராய்ந்து தீர்க்கமான முடிவை சீக்கிரமே எட்ட வேண்டும், நடைமுறைப்படுத்த வேண்டும். இதனால்தான் பொருளாதார ரீதியில் எதிர்நோக்கவல்ல சவாலை வெற்றிகரமாகப் புதிய மறை மாவட்டம் எதிர்நோக்க முடியும்.

மேலும், குறிப்பாக மக்களை ஒன்றுபடுத்தி, புத்துணர்வூட்டி, தம் திருச்சபை என்கின்ற சொந்த உணர்வை அவர்களுக்கு ஊட்டி தம்மைத் தாமே வளர்த்துக் கொள்ளும் மனப்பாங்கை அவர்களில் உண்டுபண்ணுவது புதிய மறைமாவட்டத்தின் தலையாய — முக்கியமான பணியாக அமைய வேண்டும். அனைத்துத் தரப்பார் மத்தியிலும் மாற்றத்தை — புதியதை வரவேற்று வளர்த் தெடுக்கும் புத்துணர்வைக் கொடுத்து, ஒரே குடும்பம் என்ற உணர்வோடு செயற்படவும், பொது நிலையினரைத் தம் பணிகளில் பங்காளிகளாக இணைத்துக் கொண்டு முன்செல்லவும் புதிய மறைமாவட்டம் முன்வருமா? அதற்கான தற்துணிபும் தீர்க்கதரிசனப் பார்வையும் அதனிடம் உருவாகுமா? மூடிக்கிடக்கக் கூடிய கதவுகளை அகலத் திறந்து மாற்றத்திற்கான காற்றை நிறையவே உள்வாங்க அது தயாராக இருக்கிறதா? காலம் பதில் சொல்லும்! ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாஸ்கு நாடகங்களும் - செமித்திய மத எதிர்ப்புக் கலாசாரமும்

ஜூலை மாதத் தொடர் ....

**பெ**ரும்பாலான பாஸ்கு நாடகங்கள் இயேசுவின் பாடுகள் மரணத்திற்கு முழு யூதர்களும், யூதத் தலைமைகளுந்தான் காரணமெனக் கூறி ஓர் இன, சமயக்குழுவினரை இழிவுபடுத்தும் நிலை இன்றும் தொடர்கின்றது. மேலும், இயேசுவின் மரணத்தில் அலகையுடன் கைகோர்த்தார்கள் யூதர்கள் என்று அவர்களைக் காண்பிப்பது அல்லது சித்தரிப்பது வேதனையளிக்கின்றது. பாஸ்கு நாடகம், திருப்பாடுகளின் காட்சி என்றவுடன் உலகெல்லாம் பரந்து வாழ்கின்ற யூதர்கள் அஞ்சுகின்றார்கள், பயப்படுகின்றார்கள். காரணம் என்னவெனில், 'இயேசுவைக் கொலை செய்த கொலையாளிகள்' அவர்கள் என்று சித்தரிக்கப்படுவதனால்தான். மேற்குலக நாடுகளில் இத்தகைய நிலை பிரபல்யமாகக் காணப்படுகின்றது. முதன்முதலில் தோன்றிய நாடக வடிவங்களில் இது பெரிதும் காண்பிக்கப்பட்டது. பின் நாட்களில் இவை திரைப்படங்களில் வெளிவந்தது. உதாரணமாக, 2004ம் ஆண்டில் வெளிவந்த மெல் கிப்சன் (Mel Gibson) தயாரித்து நடிப்பில் வெளிவந்த 'Passion of christ' (கிறிஸ்துவின் பாடுகள்) திரைப்படம் வெளியிடப்பட்ட போது திரைகளில் நீண்ட நாட்கள் தங்கவில்லை.

காரணம், சமூக ஆர்வலர்கள் அங்கு காட்டப்பட்ட கொடூரத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். ஒரு சமூகத்தை (யூத சமூகம்) இழிவுபடுத்துவதை எதிர்த்தார்கள். அதனால், அதுவொரு தோல்விப் படமாகவே வெளியேறியது. பக்தியுள்ள கிறிஸ்தவர்களில் இயேசுவின் பாடுகள் மீதான கவலை அடுத்தவர்களைச் சாடுவதாக மாறுவது வேதனையளிக்கின்றது. ஆனால், நம் தாய்த் திருச்சபையோ யூதர்கள் மீதான தப்பான எண்ணங்களைக் கிறிஸ்தவ விசுவாசிகளிடமிருந்து அகற்றும்படியே கேட்கின்றது. இரண்டாம் வத்திக்கான் ஏடு, கிறிஸ்தவமல்லா மறைகளுடனான தொடர்பு எனும் தொகுப்பு இலக்கம் நான்கில் கிறிஸ்தவத்திற்கும் யூதத்திற்குமிடையேயுள்ள ஆழத்தையும், நெருக்கத்தையும் அழகாக எடுத்தியம்புகின்றது. எனவே, இந்த எண்ணம் பாஸ்கு நாடகங்களில் மிளிர வேண்டும்.

**இன்றைய பாஸ்கு நாடகங்களின் நிலை :**

மேற்சொல்லப்பட்டவைகளின் அடிப்படையில் தற்காலத்தில் பாஸ்கு நாடகங்களை அளிக்கை செய்பவர்கள் பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டிய கடப்பாடு உள்ளவர்களாக இருக்கிறார்கள்.

1.யார் இயேசுவைக் கொன்றார்கள் (Why Killed Jesus) என்பதல்ல கேள்வி. எது/என்ன இயேசுவைக் கொன்றது






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(What Killed Jesus) என்பதுவே கேள்வியாக இருக்க வேண்டும். அப்போது, தெளிவாக எமக்குக் கிடைக்கக்கூடிய விடை 'மனுக்குலத்தின் பாவமே' (Sins Of Humanity) இயேசுவைக் கொன்றதென்பதாகும்.

2.முதலாவது சொன்னதை அடியொற்றி பாஸ்கு நாடகத்தின் செய்தியில் கிறிஸ்துவின் மனுக்குலத்தை மீட்கும் செய்திக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். அதைவிடுத்து, தனி நபரையோ அல்லது இனக்குழுக்களையோ தாக்குவது தவிர்க்கப்பட வேண்டும்.

3.இயேசுவின் இறப்பின் வரலாறு தேவையில்லை. மாறாக, இறப்பின் இறையியலாக் கத்தைச் (Theologization Of Christ's Death) சொல்ல வேண்டும்.

4.பாஸ்கு நாடகத் தயாரிப்பில் ஈடுபடும் போது தாய்த் திருச்சபையின் படிப்பினைகளை மையப்படுத்தி அடுத்தவரை மனம் நோகச் செய்யாத வண்ணம் தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யத்தவறும் பட்சத்தில் விவிலியம் அடுத்தவரைப் பறக்கணிக்கும் செய்தியாக மாறிவிடும்.

5.பாஸ்கு நாடகங்கள் தயாரிப்பவர்கள் அரைகுறையாக யூத வரலாற்று அறிவுடனோ அல்லது ஒன்றுமே தெரியாமலோ ஈடுபடக்கூடாது. யூத வரலாற்று அறிவில் நன்கு பரிச்சயம் பெற்ற ஒருவராக இருக்க வேண்டும். (உதாரணமாக: இயேசுவின்



கொலைக்குப் பொறுப்பு என்று சொல்லப்படுகின்ற தலைமைக்குரு நியமிக்கப்படுவது உரோமையரால்).

6.யூத மக்களுடன் இயேசு கொண்டிருந்த உறவாடல், தொடர்பாடல் காட்சிகள் அதிகமாக இடம் பெறுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், பல சாதாரண யூதர்கள் இயேசுவை மெசியாவாக ஏற்றுக்கொண்டனர்.

7.யூதர்களை மீண்டும் மீண்டும் விமர்சிப்பது தவிர்க்கப்படல் வேண்டும்.

8.ஒட்டுமொத்தமாக விவிலியமும் விவிலியச் செய்தியும் எந்தக் காலத்திலும் இன்னுமொரு இனத்தை, சமூக மக்களை, அடக்கும், ஒடுக்கும், அவமதிக்கும் ஊடகமாக மாறிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். காரணம், இயேசுவின் மரணம் உலக அன்பின் மரணம் - உலக மாந்தர் அனைவரையும் சிலுவையில் அரவணைத்த, ஒன்று சேர்த்த மரணமாகும்.

**முடிவுரை :**

இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு எனும் பாஸ்கா மறைபொருளை விளக்கும் பாஸ்கு நாடகங்கள் இன்றும் வரவேற்கத்தக்கன. ஆயினும், அது அப்படியே பாரம்பரியத்தைப் பின்பற்றி மேடையேற்றப்பட்டால் அதன் தற்காலத் தேவையிலிருந்து தோல்வியடையும். எனவே, 21ம் நூற்றாண்டின் இறையியலாக்கச் சிந்தனைகளுக்கு அமைவாக அனைவரையும் அரவணைக்கும் மொழிப்பயன்பாட்டினூடாக (Inclusiuve Language) அது ஆற்றுகைப்படுத்தப்பட வேண்டும். இயேசுவின் சிலுவை மரணத்தால் முழு மனுக்குலமும் விடுதலை பெற்றது என்பதுவே எமது செய்தியாகப் பரிணமிக்க வேண்டும். தாய்த் திருச்சபையின் எண்ணம் மேடை ஆற்றுகையூடாக வெளிவர வேண்டும். ■



**● 'அன்னை தெரசாவின் அம்மானை', 'இலக்கிய மஞ்சரி', 'கடுகுக் கதை' அடுத்த இதழில் இடம்பெறும்....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு
மட்டும்

முடிவுத்திகதி
30- 09 - 2012




# விவிலியங் கற்போம் –113

## இணைச்சட்டம் 12ம் 13ம் அதிகாரங்கள்

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

மோசே இஸ்ரயேலரிடம் " ஆண்டவர் கொடுக்கும் நாட்டில் விரட்டியடிக்கப்போகும் மக்களினங்கள் தம் தெய்வங்களுக்கு ஊழியஞ்செய்த எல்லா இடங்களையும் அழித்துவிடுங்கள். ஆனால், உங்கள் ஆண்டவருக்கு அவ்விதம் செய்யாதீர்கள். உங்கள் ……………., மற்றும் பலிகளையும், பத்திலொரு பங்கையும், அர்ப்பணக் காணிக்கைகளையும், நேர்ச்சைகளையும், தன்னார்வப் பலிகளையும் ஆடுமாடுகளின் தலையீற்றையும் அங்கே கொண்டுவாருங்கள். அங்கே ஆண்டவர் முன் அனைவரும் உண்பீர்கள். உங்கள் உழைப்பின் பயனும், ஆண்டவர் ஆசி பெற்றதுமான அனைத்துக்கும் உங்கள் வீட்டார் அனைவரும் ……………… இது தவிர நீங்கள் யோர்தானைக் கடந்து சென்று ஆண்டவர் உரிமையாகத் தரும் நாட்டில் குடியேறி அச்சமின்றி வாழச்செய்த ஆண்டவர் தெரிந்தெடுத்த ஓர் இடத்தில் எரிபலிகளைச் செலுத்துங்கள். நான் கட்டளையிடும் அனைத்தையும் நிறைவேற்றுங்கள். உங்கள் விளைச்சலில் பத்திலொரு பங்கிலிருந்தோ ………………… இரசத்திலிருந்தோ, ஆடுமாடுகளின் தலையீற்றுகளிலிருந்தோ, நேர்ச்சைகளிலிருந்தோ, தன்னார்வப் பகுதிகளிலிருந்தோ எதையுமெடுத்து உங்கள் நகரில் உண்ண வேண்டாம். ஆனால், ஆண்டவர் தெரிந்தெடுக்கும் இடத்தில் அவர் முன் அனைத்தையும் உண்ணுங்கள். ………………… கைவிடாதீர்கள். ஆண்டவர் முன் நலமானதையும், நேரியதையும் செய்தால் உங்களுக்குப் பின் உங்கள் பிள்ளைகளுக்கு என்றும் எல்லாம் நலமாகும். உங்கள் நடுவில் ஓர் இறைவாக்கினன் தோன்றி ஓர் அடையாளம் காட்டுவேன் என்று கூறலாம். அதுவும் நடக்கலாம். அதன் பின் அவன் "வாருங்கள் ………… பின்பற்றி ஊழியம் புரிவோம்" எனக்கூறலாம். அதற்குச் செவிமடுக்க வேண்டாம். ஏனெனில், உங்கள் ஆண்டவர் மீது முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும் அன்பு கூருகிறீர்களா என அவர் சோதிக்கிறார். அவருக்குக் கீழ்ப்படிந்து ஊழியம்புரிந்து அவரைப் பற்றிக் கொள்ளுங்கள். ஆனால், அந்த ……………… கொல்லப்பட வேண்டும். ஏனெனில் எகிப்திலிருந்து உங்களை அழைத்து வந்த ஆண்டவருக்கெதிராக உங்களைத் தூண்டினான். உன் குடும்ப அங்கத்தவர் யாராயினும் வேற்றுத் தெய்வங்கள் பற்றி இரகசியமாகக் கூறலாம். உன்னைச் சுற்றிலும் உனக்கருகிலோ, தொலைவிலோ, உலகின் ………………… முதல் மறுமுனை வரையிலோ உள்ள மக்களினத்தாரின் சில தெய்வங்களைப் பற்றி உன்னிடம் கூறலாம். நீ அவனுக்கு செவி கொடுக்கவோ, இணங்கவோ, இரக்கம் காட்டவோ வேண்டாம். அவனைத் தப்பவிடவோ, ஒளித்து வைக்கவோ வேண்டாம். மாறாக, நீ அவனைக் கல்லால் எறிந்து கொல்வாய். ……………… முழுவதும் இதைக் கேட்டு அஞ்சட்டும். அத்துடன் நீங்கள் குடியேறும்படி கடவுள் கொடுக்கும் நகர் ஒன்றினுள் சில கயவர் நுழைந்து மக்கள் சிலரிடம் "வேற்றுத் தெய்வங்களுக்கு ஊழியம் புரிவோம்" என்று சிலரைத் தவறான வழியில் இட்டுச் சென்றதாகக் கேள்விப்படலாம். அதை நீங்கள் அறியீர்கள். நீங்கள் நன்கு விசாரித்து, ஆராய்ந்த பின் உண்மை எனத் தெரியலாம். அந்நகரத்தாரை ………………… வாளால் வெட்டுங்கள். அந்நகர் முழுவதையும் அழித்துவிடுங்கள். அது மீண்டும் கட்டியெழுப்பப்படாது. அதனால் ஆண்டவர் தமது கடுஞ்சினத்திலிருந்து மனம்மாறிப் பேரிரக்கம் காட்டுவார். உங்கள் ………… அவர் வாக்களித்தபடி உங்களைப் பலுகச் செய்வார். ஆண்டவரின் அனைத்துக் கட்டளைகளையும் கடைப்பிடியுங்கள். அவர் பார்வையில் நேரியதைச் செய்யுங்கள்" என்று கூறினார்.

**விடைகள்: திராட்சை, வேற்றுத் தெய்வங்களை, ஒருமுனை, இஸ்ரயேல், எரிபலிகளையும், கருக்கு வாய்ந்த, மூதாதையருக்கு, இறைவாக்கினன், லேவியரை, மகிழ்வீர்கள்.**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம்–113

**(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)**

1) இலங்கையின் தேசியப் பறவை.
(காட்டுக்கோழி - மயில் - குயில்)

2) வெண்புறா அமைதியைக் குறிக்கும் செஞ்சிலுவை ......
(ஆபத்து - மருத்துவ உதவி - குடும்பக் கட்டுப்பாடு)

3) "சிம்பனி" என்னும் ஆங்கில இசை வடிவத்தை ஆசியாவிலே அமைத்த ஒரே ஒருவர்.
(A.R. ரஹ்மான் - M.S. விஸ்வநாதன் - இளையராஜா)

4) பித்தத்தைச் சுரக்கும் உறுப்பு.
(ஈரல் - பித்தப்பை - இரைப்பை)

5) அகத்தி ஆயிரங்காய் காய்த்தாலும்.....
(பறித்துண்ண ருசிதான் - புறத்தி புறத்திதான் - அதிகம் சாப்பிட இயலாது)

6) "தமிழர் பண்பு" என்பது.
(2ம் வேற்றுமைத் தொகை - 4ம் வேற்றுமைத் தொகை - 6ம் வேற்றுமைத் தொகை)

பெயர் : ..........................................................................................

முகவரி : ..........................................................................................

..........................................................................................

**அனுப்பவேண்டிய முகவரி:**
**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 113**
**தொண்டன்**
**அ. பெ. எண் – 44**
**மட்டக்களப்பு.**

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..............................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS




## விவிலியம் கற்போம் - 111 விடைகள்

கட்டளைகளை, மன்னாவினால், பஞ்சமின்றி, உள்ளங்களில், நேர்மையாளர், ஆபிரகாம், ஒரேபில், கற்பலகைகளை, நாற்பது, கடவுள்.

## அறிவை வளர்ப்போம் - 111 விடைகள்

1) அகலிகை
2) சிங்கப்பூர்
3) ரவீந்திரநாத்தாகூர்
4) ஹரிதாஸ்
5) அர்த்த இராத்திரியில் குடைபிடிப்பான்
6) விபரீத அணி

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை எவருமே எழுதவில்லை.**

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுவோர்**

- M. கிங்ஸ்ரன்,
  88/24, கணேஷ் ஒழுங்கை,
  திருகோணமலை.
- J. ஜெயகிறிஸ்டி,
  இல. 26, பிரதானவீதி,
  திருகோணமலை.

வர்ணந்தீட்டும் போட்டி முடிவுகள் 12ம் பக்கம் பார்க்க ....

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ – ர்)

## 11ம் ஆண்டு நினைவலைகள்



ஆண்டு பலவாயிடினும்
அம்மா உன் அன்புமுகம்
அழிவில்லா ஓவியமாய்
அகத்தினிலே பதிந்திருக்கும்
மாண்டவர் மீள்வதில்லை
மாநிலத்தின் விதியெனினும்
மீண்டு விட முடியவில்லை
மீறவொண்ணா நினைவுகளில்
தீண்டவொண்ணாத் திரவியமே
திசைகள் தடுமாறிடினும்
வாழ்ந்திருப்போம் உம்நினைவில்
வையகம் உள்ளவரை

### திருமதி. ஜெயராணி மாணிக்கராஜா

மலர்வு 1944.08.31

உதிர்வு 2001.08.11

**என்றும் நினைவுடன் வாழும்**
**உங்களது அன்பு நெஞ்சங்கள்**
**அன்புக்கணவர், மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.**
**இல: 27, டயஸ் ஒழுங்கை, மட்டக்களப்பு.**

☎ 065-2222622

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றில் கலந்து வரும் ....

## இலங்கை வானொலி தேசிய சேவையில்

**கத்தோலிக்க நிகழ்ச்சிகள் – தமிழ்**

## செப்டெம்பர் – 2012

**கத்தோலிக்க நற்சிந்தனை – காலை 5.55 மணி**

நாள்: 08, 09, 10, 11 – ஜே. பத்திநாதன்
12, 13, 14 – அருட்தந்தை பிறைனர் செலர்
22, 23, 24, 25 – ஸ்ரான்லி பிரபாகரன்
26, 27, 28 – போதகர் T.T. பிரான்சிஸ்

**புதிய உலகம் (வளர்ந்தோர் நிகழ்ச்சி) – மாலை 7.00 மணி**

நாள்: 02, 16, 30
(இறைவார்த்தை வழிபாடு, வேரைத்தேடி, குறுநாடகம், செய்திகள், கருத்துரை, பாடல்கள், இன்னும்......)

**சிறுவர் உலகம் (சிறுவர் நிகழ்ச்சி) – மாலை 7.00 மணி**

நாள்: 04, 18
(கதையும் கருத்தும், பாடல்கள், இன்னும்.....)

நிகழ்ச்சித் தொகுப்பு :
மலர்வேந்தன்

தொடர்பு:
சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ. எண் – 44,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org